விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 062 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 07 திங்கட்கிழமை (19.02.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## இந்தியத் துணைத் தூதரகத்தை முற்றுகையிட மீனவர்கள் முடிவு

(யாழ்ப்பாணம்)

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களுக்கு எதிராக யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்தை நாளை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தவுள்ளதாக யாழ். மாவட்ட மீனவர்கள் அறிவித்துள்ளனர்.


யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் யாழ்.மாவட்ட மீனவர்களால் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அவர்கள்,

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் கைது 15

## தெரிவுகளை மீள நடத்த நான் தயாராக உள்ளேன்!

### சிறீதரன் எம்.பி அதிரடி அறிவிப்பு



(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவி உட்பட கட்சியின் அனைத்துப் பதவிகளுக்கான புதிய தெரிவுகள் அனைத்தையும் மீள நடத்துவதற்குத் தயாராக உள்ளேன் என்று அக்கட்சியின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார். 15

## கறுப்புக்கொடி கட்டி தமிழக மீனவர்கள் போராட்டம்

5 ஆம் பக்கம் பார்க்க

## பொருளாதார வளர்ச்சி மந்தகதியில் இருக்கும்


மத்திய வங்கி

10 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கையில் தமிழினப் படுகொலை

# போர்க் குற்றவாளிகளை சர்வதேச நீதிமன்றில் நிறுத்துவோம்

### கனடாவின் கன்சர்வேட்டிவ் கட்சித் தலைவர் உறுதி



(ஒட்டாவா) இலங்கையில் தமிழினப் படுகொலையில் ஈடுபட்ட போர்க்குற்றவாளிகளை சர்வதேச நீதிமன்றத்துக்கு கொண்டு செல்லவும் குற்றஞ்சாட்டப்பட்ட போர்க்குற்றவாளிகளுக்கு எதிராக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரவும் சட்டத்தரணிகளை நியமிப்பதாக கனடாவின் கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவர் பியப் பொலிவியர் தெரிவித்துள்ளார்.

(02ஆம் பக்கம் பார்க்க)

## முதலாம் தவணை இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

2024ஆம் கல்வியாண்டுக்கான பாடசாலைகளின் முதலாம் தவணைக் கற்றல் செயற்பாடுகள் இன்று திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகின்றது.

அரச மற்றும் அரச அனுசரணையின் கீழ் இயங்கும் தனியார் பாடசாலைகளின், 2023ஆம் கல்வியாண்டுக்கான 03ஆம் தவணைக் 15

## எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில்

# பாராளுமன்றத்தைக் கலைத்து தேர்தலை நடத்தத் திட்டம்

### ஜனாதிபதி ரணில் வியூகம்



(கொழும்பு)

பாராளுமன்றத்தின் கூட்டத் தொடரினை எதிர்வரும் ஏப்ரல் மாதம் இரண்டாம் வாரத்தடன் நிறைவு செய்து பாராளுமன்றத்தைக் கலைப் 15

## சுகாதார ஊழியர்களின் மேலதிகக் கொடுப்பனவு

### இன்று முக்கிய கலந்துரையாடல்

(கொழும்பு)

சுகாதாரத் துறையினருக்கான மேலதிகக் கொடுப்பனவு தொடர்பில் 72 சுகாதார ஊழியர் சங்கங்களுக்கும் சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரணவுக்கும் இடையிலான தீர்க்கமான கலந்துரையாடல் ஒன்று இன்று மு.ப 11 மணியளவில் கொழும்பில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கலந்து 02

## யாழ்., கிளிநொச்சி அரச அதிபர்களின் சேவைக்காலம் ஒரு வருடம் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)


யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர்களின் பதவிக் காலத்தினை மேலும் ஒரு வருடம் நீடிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் கடந்த 12ஆம் திகதியுடன் 15

## அரச வங்கிகள் வங்குரோத்தடைய அரசியல்வாதிகளும் காரணம்

### தனியாருக்கு விற்பது தீர்வல்ல

### பிரதமர் தினேஸ் குணவர்த்தன



(கொழும்பு)

அரசியல்வாதிகளுக்கும் பெரும் வர்த்தகர்களுக்கும் வழங்கப்பட்டுள்ள கடன்களினாலேயே அரச வங்கிகள் வங்குரோத்தடைந்தன.

எனவே அவற்றை மீட்க அரச வங்கிகளைத் தனியாருக்கு விற்பனை செய்வது உரிய தீர்வல்ல என பிரதமர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்தார்.

இதன் போது கருத்துத் தெரிவித்த 15

## போதைப் பாவனையால் இளைஞர்கள் இருவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் அதிகரித்த போதைப்பொருள் பாவனையால் ஒரே நாளில் இரு இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர்.

மல்லாகம் பகுதியைச் சேர்ந்த 30 16



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை 13ஐ ஏற்றுக் கொண்டாலும் நடைமுறைப்படுத்த தயங்குகிறது

இந்திய, இலங்கை ஒப்பந்தத்தினை முழுமையாக அமுலாக்குவதோடு 13ஆவது திருத்தச்சட்டத்தினையும் நடைமுறைப் படுத்துமாறு எமது நாட்டின் பிரதமர் நரேந்திர மோடி உட்பட நாம் அனைவரும் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின் றோம். ஆனால் இலங்கை அரசாங்கம் அதனை ஏற்றுக்கொண்டாலும் நடைமுறை யில் ஆர்வம் காண்பிக்கவில்லை என் பதை உணர்கின்றோம் என்று இலங் கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் கருத்துத் தெரிவித்த அவர்,

குறிப்பாக, இந்திய இலங்கை ஒப்பந்த மானது, தமிழ் மக்களையும் அவர்களது பூர்வீகத்தையும் பாதுகாப்பதற்காக மேற் கொள்ளப்பட்டதாகும்.

அந்த ஒப்பந்தத்தில் தமிழ் மக்களின் சார்பில் இந்தியாவே கையொப்பமிட் டுள்ளது. எனினும் தற்போது வரையில் அந்த ஒப்பந்தத்தினை இலங்கை அரசாங்கம் நடைமுறைப்படுத்தவில்லை.

அதுமட்டுமன்றி, குறித்த ஒப்பந்தத்தின் பின்னர் அரசியலமைப்பில் உள்ளீர்க்கப் பட்ட 13ஆவது திருத்தச்சட்டத்தினையும் அரசாங்கம் முழுமையாக நடைமுறைப் படுத்துவதற்கு காலத்தை இழுத்தடித்து வருகின்றது.

அத்துடன், 13ஆவது திருத்தச்சட்டத் தினை முழுமையாக நடைமுறைப்படுத் துமாறு நாம், அரசாங்கத்தின் அனைத்துச் சந்திப்புக்களிலும் வலியுறுத்துகின்றோம்.

இலங்கை அரசாங்கத்தின் பிரதிநி திகள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அதனை மறுதலிக்கவில்லை. ஆனால், அவர்கள் அதனை நடைமுறைப்படுத் துவதில் ஆர்வம் காண்பிக்கவில்லை. எனினும் நாம் தொடர்சியாக அந்த விடயத் தில் கவனம் செலுத்துவோம் என்றார். (ந-7)






## சுகாதார...

ரையாடலும் தோல்வியடையும் பட்சத்தில் இன்று பிற்பகல் கூடி வேலைநிறுத்தம் தொடர்பில் தீர்மானம் எடுக்கவுள்ளதாக சுகாதார வல்லுநர் சங்கங்களின் கூட் டமைப்பு தெரிவித்துள்ளது.

கடந்த சில வாரங்களில், 72 சுகாதார தொழிற்சங்கங்கள் கடந்த சில நாட்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு, தமக்கும் அதிகரிக்கப்பட்டுள்ள DAT கொடுப்பனவான முப்பத்தைந்தாயிரம் ரூபாவை வழங்குமாறு கோரிக்கை விடுத் துள்ளன.

தொழிற்சங்கங்களின் கோரிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு சுகா தார அமைச்சர் ரமேஷ் பத்திரன எழுத்து மூலம் இணக்கம் தெரிவித்ததையடுத்து கடந்த 15ஆம் திகதி காலை வேலை நிறுத்தம் தற்காலிகமாக முடிவுக்கு கொண் டுவரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## போர்க்குற்ற...

"நாங்கள் ஐ.நா. மற்றும் பிற சர்வதேச அரங்குகளில் இதற்கான பிரேரணை களை முன்வைப்போம். அவர்களின் குற்றங்களிற்கு அவர்கள் பொறுப்பேற்க வேண்டும் மற்றும் இது தமிழர்களுக்கு எதிராக அவர்கள் நடத்திய இனப்படு கொலை என்பதை உலக அரங்கில் அங்கீகரிக்க வேண்டும்".

"கனடாவின் வெளியுறவு விவகாரங்க ளுக்கான வழக்கறிஞர்களை சர்வதேச குற்றவியல் நீதி மன்றங்களில் வழக்குத் தொடர நாங்கள் வழி நடத்துவோம். அவர்கள் நடத்திய இனப்படுகொலைக்காக அவர்கள் மீது வழக்குத் தொடரப்படும்". எனவும் பியப் பொலிவியர் தெரிவித்தார்.

கனடாவின் கன்சர் வேட்டிவ் கட்சியின் தலைவர் பியப் பொலிவியரின் மேற் போந்த கருத்தை வரவேற்றுள்ள, நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் தலைவர் வி. உருத்திரகுமாரன் நீதிக்காகப் போராடும் மக்களுக்கு ஆதரவாக நிற்கும் ஒரு சிறந்த கனேடியத் தலைவர் தான் என்பதை பியப் பொலிவியர் நிரூபித்துள்ளார் என்றும் உருத்திரகுமாரன் கருத்துரைத்துள்ளார். (ந-7)


பல ஆயிரம்
கடந்த பதிவுகள்

பல நூற்றுக்கு மேற்பட்ட திருமணங்களை
பொருத்திய சாதனைகள்
உங்கள்
கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவையை உலகின்
எப்பாகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ள
www.kalyanamalai.lk
இணையத்தளத்தைப் பாருங்கள்
பதிவுக்கட்டணம் ரூபாய் 4,000/=





தொடர்புகளுக்கு :-
கல்யாண மாலை
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
Email : kalyanamalai.jaffna@gmail.com


## 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 10 - 04 - 1955



மறைவு 21 - 01 - 2024

### திரு. சின்னத்துரை சிவராசா

(ஓய்வுநிலை லிகிதர் - கட்டைவேலி ப.நோ.கூ.சங்கம்)

கடந்த 21.01.2024 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவரின் அந்தியேட் டிக்கிரியைகள் நாளை (20.02.2024) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து மூத்தவிநாயகர் மண்டபத்தில் இடம் பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

மேலும் அன்னாரின் மறைவுச் செய்தி அறிந்து பல வழிகளிலும் உதவி புரிந்த அன்பு நெஞ்சங்களுக்கும் தொலைபேசி ஊடாகவும் சமூக வலைத்தளங்களினூடாகவும் அனுதாபம் தெரிவித்த அன்பு நெஞ்சங்களுக்கும் பதாகைகள், துண்டுப்பிரசுரங்கள் வெளியிட்டவர்களுக்கும் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் வீட் டுக்கு வருகை தந்து ஆறுதல் கூறிய அன்பு நெஞ்சங்களுக்கும் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள் கின்றோம்.

தொலைபேசி
077 332 6008, 077 949 0911 (C-8380)

இங்ஙனம்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்கள் முன்னிலையில் போதைப்பொருட்களை பாவிக்காதீர்கள்

## வைத்தியர் விடுத்த எச்சரிக்கை

**(கொழும்பு) போதைப்பொருட்களில் இரு ந்து சிறுவர்களைப் பாதுகாப்பதில் சமூகம் கவனம் செலுத்துவது மிகவும் முக்கியமானது என சிறுவர் வைத்திய நிபுணர் வைத் தியர் தீபால் பெரேரா எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

பெற்றோர்களும் பாதுகாவலர்களும் சிறுவர்கள் முன்னிலையில் மதுபானம் மற்றும் போதைப் பொருட்களை உட்கொள்ளக் கூடாது எனவும் போதைப் பொருட்களை சிறுவர்களின் பார்வையில் வைக்கக் கூடாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குருநாகலை - மாதுராகொட பகுதியிலுள்ள பாடசாலை ஒன்றில் தரம் 5 இல் கல்வி கற்கும் மாணவர்கள் போதை மாத்திரையை உட்கொண்டதன் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சம்பவத்திற்கு பதிலளிக்கும் போதே சிறுவர் வைத்திய நிபுணர் தீபால் பெரேரா இதனை தெரிவித்துள்ளார்.

குருநாகலை - மதுராகொட பிரதேசத்தில் உள்ள ஆரம்ப பாடசாலை ஒன்றில் தரம் 5 இல் கல்வி கற்கும் மாணவன் ஒருவன் தனது தந்தை மறைத்து வைத்த சில போதை மாத்திரைகளை பாடசாலைக்கு கொண்டுசென்றதுடன் ஏனைய மூன்று மாணவர்களுடன் இதனை உட்கொண்டுள்ளனர்.

இந்தநிலையில் ஒவ்வாமை ஏற்பட்டு குறித்த 4 மாணவர்களும் குருநாகல் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் குறித்த சிறுவனின் தந்தை போதைப்பொருளுக்கு அடிமையானவர் என தெரியவந்துள்ளதுடன் சம்பவம் தொடர்பில் அவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர் நேற்று முன்தினம் குருநாகல் நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதன் பின்னர் நாளை வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (நி)

# அரசியல் கட்சிகளுக்கு அழைப்பு விடுத்த தேர்தல் ஆணைக்குழு

(கொழும்பு)

எதிர்வரும் தேர்தல்கள் தொடர்பில் கலந்துரையாடும் நோக்கில் அரசியல் கட்சிகளுக்கு தேர்தல் ஆணைக்குழு அழைப்பு விடுத்துள்ளது.

எதிர்வரும் வாரத்தில் இந்த சந்திப்பு நடைபெறவுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு, அரசி யல் கட்சிகளின் செயலாளர்களுக்கு அறிவித்துள்ளது.

இதன்படி, பதிவு செய்யப்பட்டுள்ள 80 அரசியல் கட்சிகளில் அரைவாசிக்கும் மேற்பட்ட கட்சிகளின் பிரதிநிதிகள் தேர்தல் ஆணைக்குழு தலைவரை அடுத்த வாரம் சந்திக்க உள்ளனர்.

இந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதுடன் அதன் பின்னர் பாராளுமன்றத் தேர்தலையும் நடத்த வேண்டியுள்ளது.

மேலும் தேர்தல்கள், வாக்காளர் பதிவு தொடர்பிலான பிரச்சினைகள் குறித்தும் இந்த சந்திப்பில் கவனம் செலுத்தப்பட உள்ளது. (நி)

# மதுபான உற்பத்தி வீழ்ச்சி

(கொழும்பு)

இலங்கையில் மதுபான உற்பத்தியில் வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக நிதி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள அரச நிதி முகாமைத்துவ அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களிலும் மதுபான உற்பத்தி 13.4 வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது.

கடந்த 2022 ஆம் ஆண்டில் குறித்த காலப்பகுதியில் நாட்டின் மொத்த மதுபான உற்பத்தி 31.2 மில்லியன் லீற்றர் எனவும் கடந்த 2023 ஆம் ஆண்டில் இந்த தொகை 27 மில்லியன் லீற்றர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும்போது 2023 ஆம் ஆண்டில் நாட்டின் மதுவரி வருமானம் சிறிதளவு வீழ்ச்சியை பதிவு செய்துள்ளது.

கடந்த 2023 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்ட எதிர்பார்க்கப்பட்ட வரி வருமானத்தில் 58 வீதம் கிடைக்கப்பெற்றுள்ளதாக நிதி அமைச்சு தெரிவித்துள்ளது. (நி)

# நல்லூர்க் கந்தனை வழிபட்டார் இந்திய உயர்ஸ்தானிகர்



**(யாழ்ப்பாணம்)**

**இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா நேற்று முன்தினம் நல்லூர் கந்த சுவாமி கோயிலில் வழிபாட்டில் ஈடுபட்டார்.**

**இதன்போது யாழ்ப்பாண இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் உள்ளிட்ட இந்திய தூதரக அதிகாரிகளும் உடனிருந்தனர். (நி-33)**

# அடகுக் கடையை நம்பியே 60 வீதமானோர் வாழ்கின்றனர்

## பேராயர் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் சுமார் 60 வீதமான மக்கள் தங்களது நகைகளை அடகு வைத்துள்ளதாக கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

கம்பஹா மிரிஸ்ஸவத்த பகுதியில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்று அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மக்கள் தங்களது அன்றாட வாழ்க்கைச் செலவுகளை மேற்கொள்ள முடியாது நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர்.

வாழ்வதற்கு போதியளவு சம்பளம் அல்லது வருமானம் கிடைக்காத காரணத்தினால் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (நி)

# சிறந்த அரசாங்கத்தை உருவாக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்து

(கொழும்பு)

பௌத்த மதத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட்டு ஏனைய மதங்களுக்கும் பொருத்தமான இடம் வழங்கப்பட வேண்டும் என அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ள போதிலும் அது முறையாக இடம்பெறவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பிக்குகள் ஆலோசனை பேரவையின் மாவட்ட மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அறநெறி பாடசாலை பரீட்சைகளைக் கூட நடத்த முடியாத அரசாங்கம் தற்போதுள்ளது.

குடும்பவாத அரசியல் நாட்டையே அழித்துள்ளது. பிரிவினைவாத பயங்கரவாதத்தை தோற்கடித்த பின்னர் அம் மரியாதை, கௌரவம் முப்படைகளுக்கு செல்ல வேண்டும்.

ஆனால் அந்த [illegible] யையும் கௌரவத்தையும் ஒரு சில குடும்பங்கள் எடுத்துக் கொண்டன.

அவ்வாறு எடுத்துக் கொண்டு நாட்டின் வளங்களை கொள்ளையடித்து நாட்டில் பொருளாதார பயங்கரவாதத்தை செயற்படுத்தி நாட் [illegible] டொலர் மதிப்பிலான கடனில் நாடு மூழ்கியுள்ளது.



தேர்தலில் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவதுடன் நாட்டை கட்டியெழுப்பக் கூடிய உண்மையான அரசாங்கத்தை உருவாக்க முன்வர வேண்டும் என எதிர்க் கட்சித் தலைவர் வலியுறுத்தியுள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுச் செய்திகள்

# ஆப்கானிஸ்தானுக்கு எதிராக முதலாவது ரி-20 போட்டி
# 4 ஓட்டங்களால் இலங்கை அணி வெற்றி




ஆப்கானிஸ்தான் அணிக்கும் இலங்கை அணிக்கும் இடையிலான முதலாவது இருபதுக்கு இருபது கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி 4 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 19 ஓவர்கள் நிறைவில் 160 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

அதன்படி, இப்போட்டியில் ஆப்கானிஸ்தானின் வெற்றி இலக்கு 161 ஓட்டங்கள் ஆகும்.

இந்நிலையில், நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் ஆப்கானிஸ்தான் அணியால் 9 விக்கெட்டுகளை இழந்து 156 ஓட்டங்களைப் பெற்று முதலாவது இருபதுக்கு இருபது கிரிக்கெட் போட்டியில் தோல்வி அடைந்தது.

இலங்கை மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகளுக்கிடையிலான முதலாவது இருபதுக்கு 20 கிரிக்கெட் போட்டி ஆரம்பமாகியுள்ளது.

தம்புள்ளை சர்வதேச விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் போட்டி இடம்பெற்றது.

நாணய சுழற்சியில் வென்ற ஆப்கானிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது.

தம்புள்ளை மைதானத்தில் ஆண்களுக்கான சர்வதேச இருபதுக்கு-20 கிரிக்கெட் தொடர் நடத்தப்படுவது இதுவே முதல் சந்தர்ப்பமாகும்.

இதேவேளை, தம்புள்ளை மைதானம் நவீனப் படுத்தப்பட்ட பின்னர் நடத்தப்படும் முதல் சர்வதேச போட்டியும் இதுவாகும்.

ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணி இலங்கையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 1 டெஸ்ட், 3 ஒருநாள் மற்றும் 3 ரி-20 போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்று விளையாடி வருகிறது.

இதில் டெஸ்ட் தொடரையும் ஒருநாள் தொடரையும் இலங்கை அணி கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3043

### நந்தினி




### கதிர்




### ரோஜா




### விக்கி




### அஞ்சலி




### அர்ஜுன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறுப்புக் கொடி கட்டி தமிழக மீனவர்கள் போராட்டம்



(சென்னை)

எல்லை தாண்டி மீன் பிடித்ததாக கைது செய்யப்பட்ட மீன்பிடி விசைப்படகின் ஓட்டுநருக்கு ஆறுமாத சிறைத் தண்டனை மற்றும் இரண்டாவது முறையாக கைது செய்யப்பட்ட மீனவருக்கு ஓராண்டு சிறை தண்டனை விதித்தமையைக் கண்டித்து ராமேஸ்வரம் விசைப்படகு மீனவர்கள் தொடர் வேலைநிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் மீனவர்கள் தங்களது எதிர்ப்பை வெளிப்படுத்தும் விதமாக ராமேஸ் வரம் மீன்பிடித் துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள சுமார் 800 இற்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை கறுப்பு கொடியேற்றி போராட்டம் நடத்தி வருகின்றனர். (நி)




## 19 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 17.05.1954

மறைவு 19.02.2005

அமரர். கருணைவேல் தேவநாயகி



ஆற்றுப்படுத்தி வழிகாட்டினீர்
ஆண்டுகள் பத்தொன்பது ஆனாலும்
ஆறாது உம் பிரிவுத்துயர்
ஆண்டவனடியில் ஆறுதலடைய
ஆத்மார்த்தமாய் பிரார்த்திக்கின்றோம்.

துவாளி வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி (அருண்சோ மில் உரிமையாளர்)

(c-8378)

கணவர்-கருணைவேல்
பிள்ளைகள்-அரும்செல்வி,
சந்திரிகா, ஜனகன்

# இராசிபலன்

19.02.2024
மாசி 07, திங்கட்கிழமை
தசமி பிற்பகல் 12.55 மணிவரை

மிருகசீரிடம் பிற்பகல் 02.19 மணிவரை
சுபநேரம் -12.32-02.02 மணிவரை
இராகுகாலம்-08.02-09.32 மணிவரை
அமிர்தசித்தம்

சந்திராஷ்டமம்
சுவாதி, விசாகம்

வளவன்

**மேஷம்** — குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பகையொன்று நட்பாகலாம், சவால்களை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள், காரிய அனுகூலமுண்டு.

**இடபம்** — சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், வாக்கு மேன்மையுண்டு, உற்சாகமான நாள்.

**மிதுனம்** — ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் விரயங்கள் ஏற்படலாம், உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், போசன சுகமுண்டு.

**கடகம்** — தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், மாற்றங்களால் ஏற்றம் உருவாகலாம், சுப விரயங்கள் மேலோங்கும் நாள்.

**சிம்மம்** — இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் வாய்ப்புண்டு.

**கன்னி** — புதிய முயற்சிகள் கைகூடும், ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், காலைப் பொழுதே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**துலாம்** — சிலர் தொழில் ரீதியாக உதவிகேட்டு வரலாம், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், உறவினர் வழியில் மனநிறைவான செய்தியொன்று வந்து சேரலாம்.

**விருச்சிகம்** — எடுத்த காரியங்களை நிறைவேற்ற கொஞ்சம் அலைச்சல் ஏற்படலாம், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், உடல் நலனில் கவனம் தேவை.

**தனுசு** — குடும்பத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், நீண்டநாளைய விருப்பமொன்று நிறைவேறலாம், சுற்றத்தார் வரவால் சுகம் காணும் நாள்.

**மகரம்** — சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், மறைமுக போட்டிகள் மாறும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கும்பம்** — சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு, புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**மீனம்** — புதிய நபர்களின் சந்திப்பால் பொருளாதார நிலை உயரும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம்.

கொடுத்தும் குறையாதது வாக்குறுதி மட்டுமே.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடமாகாண சுகாதார பயிற்சி நிலையம் திறப்பு



(யாழ்ப்பாணம்)

வடமாகாண சுகாதார பயிற்சி நிலையம் 34 வருடங்களின் பின்னர் மயிலிட்டியில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மயிலிட்டி பகுதியில் சுகாதார திணைக்களத்திற்குரிய காணி 1990 ஆம் ஆண்டுக்கு பின்னர் பயன்பாடற்ற நிலையில் இருந்த நிலையில், தற்போது பயிற்சி நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

இதன் மூலம் சுகாதார திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு பல்வேறு பயிற்சிகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (நி-33)

# போதைப்பொருள் தொடர்பில் நடப்பாண்டில் 250 வழக்குகள்

## பொலிஸார் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் கடந்த இரண்டு மாத காலப்பகுதியில் சுமார் 250 போதைப் பொருள் தொடர்பிலான வழக்குகள் நீதிமன்றங்களில் தொடரப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த டிசெம்பர் மாதம் முதல் இந்த மாதம் வரையான காலப்பகுதியில் யாழ் மாவட்டத்தில் போதைப்பொருளுக்கு எதிராக பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்ட சிறப்பு நடவடிக்கைகளில் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்தமை, கடத்திச் சென்றமை, விற்பனை செய்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் கீழ் கைது செய்யப்பட்டவர்களுக்கு எதிராக நீதிமன்றங்களில் 250 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி-33)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 250 | 220 | 250 | 350 |
| உருளைக்கிழங்கு | 160 | 150 | 130 | 150 | 140 |
| பச்சைமிளகாய் | 800 | 500 | 500 | 800 | 520 |
| தக்காளி | 800 | 700 | 550 | 1000 | 660 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 130 | 120 | 200 | 100 |
| கோவா | 450 | 500 | 550 | 500 | 650 |
| கரட் | 800 | 500 | 600 | 700 | 900 |
| பூசணி | 300 | 250 | 220 | 350 | 235 |
| புடோல் | 200 | 200 | 100 | 200 | 150 |
| வாழைக்காய் | 250 | 250 | 150 | 300 | 220 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 250 | 300 | 250-350 |
| பெரிய வெங்காயம் | 380 | 450 | 380 | 500 | 350-480 |
| பாகற்காய் | 400 | 400 | 400 | 400 | 400 |
| வெண்டக்காய் | 600 | 400 | 200 | 500 | 365 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 120 | 200 | 140 |
| பயற்றங்காய் | 400 | 300 | 250 | 500 | 450 |
| லீக்ஸ் | 350 | 450 | 400 | 450 | 400 |
| பீற்றூட் | 300 | 300 | 280 | 350 | 400 |
| கறிமிளகாய் | 600 | 800 | 550 | 800 | 710 |
| முருங்கைக்காய் | 1200 | 1200 | 1000 | 1200 | 1200 |
| போஞ்சி | 400 | 500 | 400 | 600 | 500 |
| கத்தரிதம்புள்ள | 250 | 150 | 120 | 200 | — |
| கீரை – 1 பிடி | 80 | 100 | 80 | 80 | 50-90 |
| தேசிக்காய் | 150 | 300 | 150 | 200 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 110 | 80 | 70-100 | 50-110 |
| இராசவள்ளி | 400 | 400 | 300 | 400 | 400-500 |
| வெங்காயப்பூ | 200 | 200 | 250 | 300 | 160 |
| முள்ளங்கி | 100 | 100 | 150 | 200 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 120 | 120 | 60 | 120 |
| வல்லாரை | 60 | 250 | 50 | 80 | 70 |
| ஈரப்பலா | 100 | 100 | 80 | 160 | 100 |

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## பிரசவித்த பெண்களுக்கு காயச் சரக்கை கொடுக்கும் மூலிகைகள்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

கர்ப்ப காலத்தில் மட்டுமன்றி பிரசவித்த பின்பும் பெண்களின் உணவு விடயத்தில் முக்கிய கவனம் தேவை. பிரசவித்த பெண்களுக்கு 'சரக்கு' அரைத்துக் கொடுக்கும் வழக்கமும் எமது மக்களிடையே பெருமளவில் காணப்படுகின்றது. இவ்வகையான காயம் கர்ப்பாசயத்திற்கு வரவைக் கொடுப்பதுடன் கர்ப்பாசயக் கழிவுகளை வெளியேறச் செய்வதும் தாய்ப்பாலை அதிகம் சுரக்கச் செய்வதும் இதன் நோக்கமாகும்.

கொத்தமல்லி 25 கிராம், நற்சீரகம் 12 கிராம், மிளகு சிறிதளவு, தேங்காய்ச் சொட்டு -சிறுதுண்டு, மஞ்சள் -சிறு துண்டு இவற்றை எடுத்து அம்மியில் இட்டு பட்டுப்போல நன்றாக அரைத்து எடுத்து வைத்துக் கொண்டு தாச்சியில் போதியளவு நல்லெண்ணெய் விட்டு சூடாக்கி நறுக்கிய கத்தரி பிஞ்சுகளை இட்டு நன்கு வதக்கி வெந்து வரும் வேளையில் அரைத்து வைத்த சரக்கையும் சிறிது உப்பையும் அதனுடன் சேர்க்கவும். சிறிது இஞ்சித்துண்டு, வெங்காயம், உள்ளி என்பவற்றை தட்டிப் போட்டு இறக்கி வைத்துக் கொண்டு குடிக்க கொடுக்கலாம். மிகுதியை சோற்றுடன் உண்ணலாம். இம்முறையை குழந்தை பிறந்து மூன்றாம் நாளிலிருந்து தினம் இரு வேளையாக 31 நாட்கள் வரை கொடுக்கலாம். இக்காலத்தில் மிளகாய், காரவகைககளை தவிர்க்க வேண்டும். கொத்தமல்லி, நற்சீரகம் என்பவற்றில் இரும்புச்சத்து, கல்சியம், பொசுபரசு என்பன அதிகமாக உண்டு. இதனால் இவற்றை பிரசவித்த பெண்களுக்குக் கொடுக்கும் போது கர்ப்ப காலத்திலும் பிரசவத்தின் போதும் இழந்த உடல் வலிமை, குருதி என்பவற்றை மீள உற்பத்தி செய்வதற்கும் இவை உதவுகிறது. உள்ளி தாய்ப்பால் சுரப்பை அதிகரிக்கச் செய்யும். மேலும் சரக்கு, காயம் என்பன தயாரிக்கும் போது நல்லெண்ணெயே பிரதானமாக விட்டரைக்கப்படுகிறது.

இதில் லினோலிக்கமிலம், உயிர்ச்சத்து A என்பன உண்டு. அத்துடன் மல்லி, சீரகம் என்பவற்றிலுள்ள உயிர்ச்சத்து A அகத்துறிஞ்சப்படுவதிலும் இது உதவுகிறது. சில முறையில் பிரசவித்த பெண்களுக்கு கொடுக்கும் காயம் ஆனது மஞ்சள் 1 துண்டு, நற்சீரகம் 1/2 சிறங்கை, வேர்க்கொம்பு ஒரு சிறு துண்டு, சாரணைவேர் 1 சிறு துண்டு என்பவற்றை எடுத்து தண்ணீர் விடாமல் நல்லெண்ணெய் சிறிது சிறிதாக விட்டரைத்து பசுந்தான பின் பனங்கட்டியுடன் சேர்த்து 5 கிராம் அளவு தினம் இரு வேளை 3-5 நாட்களுக்கு கொடுக்க வேண்டும்.

அதாவது பிரசவித்த பின்பு 2,3 குளிப்புகளிற்கு பின்பே பயன்படுத்த வேண்டும். கருப்பைப் புண்கள் ஆறவும் வயிற்று நோ மாறவும் கருப்பை அழுக்குகள் வெளியேறவும் பசி எடுப்பதற்கும் தாது புஷ்டியை ஏற்படுத்தவும் உதவும்.

மேலும் பிரசவித்த பின்பு பத்தியக்கறிகளில் அவரைப் பிஞ்சு, முருங்கைப்பிஞ்சு, வாழைப்பிஞ்சு, வெள்ளைப் பூடு, வெந்தயம், பெருங்காயம் என்பன பயன்படுத்தப்படும்.

இவ்வகையான பிஞ்சுகளில் நுண்போசனைக் கூறுகள் அதிகமாகக் காணப்படும். அத்துடன் செவ்வாழைப்பழம், நேத்திரப் பழம், பனங்கட்டி என்பன அதிகளவில் பயன்படுத்தப்படுகிறது.

இவை தாய்ப்பால் சுரப்பை அதிகமாக சுரக்க உதவுகிறது. மேலும் பிரசவித்த பெண்களுக்கு கொடுக்கும் சாராய ஊறல் சரக்குகளானது மருத்துவ முக்கியத்துவமுடைய மூலிகைகளாகும். சாதிக்காய், கராம்பு, ஏலம், வசுவாசி, கறுவா, திப்பிலி, வெந்தயம், சீரகம், உள்ளி, கோட்டம், அதிமதுரம், மல்லி, நிறுநாகம்பூ, குங்குமப்பூ, வால்மிளகு, ஓமம், மிளகு, வாய்விடங்கம், மஞ்சள், சிற்றர த்தை, திப்பிலி மூலம் இவை ஒவ் வொன்றும் 5 கிராம் அளவு எடுத்து இரத்து அரித்து 2 போத்தல் சாராயத்தில் ஊறப் போட்டு சேறான நிலத்தில் அல்லது நெல்லினுள் இரண்டு மாதம் வரை புதைத்து வைத்திருந்து எடுத்து குழந்தை பிறந்து 2,3 நாட்களுக்குப் பின் ஒரு தேக்கரண்டி வீதம் தினம் ஒரு வேளையாக முப்பத்தியொரு நாட்கள் வரை கொடுக்க வேண்டும். இது பிரசவித்த பின்னர் குளிர்சன்னி (Puerperal Sespis) ஏற்படாமல் தடுக்க உதவும். பாலூட்டும் தாயையும் சேயையும் ஆரோக்கியமாக வைத்திருக்கவும் உதவும். பாலூட்டும் தாய்மார்கள் எவ்வளவுக்கு எவ்வளவு திரவ உணவு அல்லது நீர் அருந்துகிறார்களோ அவ்வளவுக்கு அவ்வளவு நன்று. பிரசவித்த பெண்களில் உணவு முறையுடன் அவளின் மூலிகை குளியல் முறையும் முக்கியமானதாகும். 3,5,7 ஆம் நாட்களில் மாவிலங்கு, நொச்சி, வேம்பம் பட்டை, பருத்தி இலை, முத்தாமணக்கு இலைகள் மற்றும் பட்டைகளை அவித்து குளிக்க வேண்டும்.

இதனால் கருப்பை வலுவடைவதுடன் அழுக்குகள் நீங்கி தாய்ப்பால் அதிகம் சுரக்க ஏதுவாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 125 விவசாயிகளுக்கு துப்பாக்கிகள் வழங்கி வைப்பு

(நெளுக்குளம்)

வவுனியா மாவட்டத்தில் 125 பேருக்கு விவசாய பயிர் பாதுகாப்பு துப்பாக்கிகள் கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தானால் வழங்கி வைக்கப்பட்டது.

வவுனியா மாவட்ட செயலகத்தில் அரச அதிபர் பீ.ஏ.சரத்சந்திர தலைமையில் இந் நிகழ்வு இடம்பெற்றது.

யுத்தத்தால் பாதிப் படைந்த வவுனியா மக்கள் விவசாய நடவடிக்கைகளை முன்னெடுத்து வரும் நிலையில் விலங்குகளால் விவசாய செய்கைக்கு சேதம் ஏற்படுத்தப்பட்டு வருகின்றது.

இதன் காரணமாக, பல விவசாயிகளின் வாழ்வாதாரம் மற்றும் பொருளாதாரம் என்பன பாதிப் படைந்துள்ளன.

இதனால் விவசாயிகளின் விவசாய செய்கையை பாதுகாக்கும் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட 125 பேருக்கு குறித்த விவசாய பாதுகாப்பு துப்பாக்கிகள் வழங்கி வைக்கப்பட்டது.

(நி-250)

# செட்டிக்குளத்தில் 650 ஏக்கர் காணியினை 650 குடும்பங்களுக்கு வழங்க நடவடிக்கை

### திலீபன் எம்.பி

(வவுனியா)

வவுனியா, செட்டிகுளம் பகுதியில் 650 ஏக்கர் வயல் காணியினை 650 குடும்பங்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஒருங்கிணைப்பு குழுத் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான கு.திலீபன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,வவுனியா, செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட அருவித் தோட்டம் பகுதியில் பல நூறு ஏக்கர் காணிகளை விடுவித்துக் கொடுக்கப்பட்டிருந்தும் அதில் 15 பேர் மாத்திரமே பயிர் செய்து வருகின்றனர்.

இவ் வயல் காணிகளை மீளப் பெற்று தலா ஒரு ஏக்கர் வீதம் காணியற்ற 650 குடும்பங்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம். இதனால் பல குடும்பங்கள் தமது வாழ்வாதாரத்திற்காக நெற் செய்கையில் ஈடுபட முடியும்.

இது தொடர்பாக மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதுடன் அரச அதிபர், பிரதேச செயலாளர், கமநல சேவை திணைக்கள உதவி ஆணையாளர் ஆகியோருக்கும் தெரியப்படுத்தியுள்ளேன். அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துள்ளனர் என அவர் தெரிவித்தார்.(நி-250)

# ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தாருங்கள்

## முல்லைத்தீவு மதவாளர் சிங்கக்குளம் கிராம மக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு மதவாளர்சிங்கம் குளம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்குமாறு கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

252 குடும்பங்கள்வாழ்கின்ற இக்கிராமத்தில் மகப்பேற்று சிகிச்சைக்காக பெண்கள் மூன்று கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள குமாரசாமிபுரம் கிராமத்திற்கு அல்லது மாமூலை கிராமத்திற்கு செல்ல வேண்டி உள்ளது.

இதனால் மதவாளர் சிங்கம் குளம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையத்தினை அமைத்துத் தருமாறு அதிகாரிகளிடம் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சுகாதார உத்தியோகத்தர்கள் வீடு வீடாக சென்று பதிவுகளை மேற்கொள்வதற்கும் பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான சிகிச்சைகளையும் இலகுவாக வழங்க முடியும். ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு உரிய காணி இக் கிராமத்தில் ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-350)

# கொடிகாமத்தில் விபத்து இருவர் படுகாயம்

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பருத்தித்துறை வீதியில் படைமுகாமை அண்மித்து நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஹொறியை வீதியோரம் நிறுத்தி விட்டு வீதியில் நின்ற சாரதியை மோட்டார் சைக்கிள் மோதியதில் லொறிச் சாரதி கால் முறிவடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.அத்துடன் மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்த இளைஞனும் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி-30)

# குள புனரமைப்பு பணிகளை மீள ஆரம்பிக்குமாறு கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பெரியசாளம்பன் கிராமத்தில் அரை குறையில் நிறுத்தப்பட்டுள்ள குள புனரமைப்பு பணிகளை மீண்டும் ஆரம்பிக்குமாறு கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

2013 ஆம் ஆண்டு இக்கிராமத்தில் குள புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. தட்டார் மலை கிராம அலுவலர் பிரிவில் பெரியசாளம்பன் கிராமம் உள்ளது.

தட்டார்மலை கிராமத்திற்கு முத்தையன்கட்டு குள நீர் வரும் நிலையில் பெரிய சாளம்பன் கிராமத்திற்கு முத்தையன்கட்டு குள நீர் வருவதில்லை. இந்நிலையில் 2013 ஆம் ஆண்டில் குள புனரமைப்பு வேலைகள் இக் கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்டன. 2015 ஆம் ஆண்டில் பெருமழை யின் போது இக்குளத்தின் அணைக்கட்டு உடைப் பெடுத்தது. தற்போது குளத்தின் வேலைகள் முழுமை பெறாமல் அரை குறையில் காணப்படுகின்றது. 115 குடும்பங்கள் வாழ்கின்ற இக்கிராமத்தில் இக்குளம் புனரமைக்கப்பட்டால் 200 வரையான ஏக்கர் நிலப்பரப்பிற்கு நீர்ப்பாசனம் மேற்கொள்ள முடியும். கடும் வறட்சியான காலங்களில் ஏற்படுகின்ற குடிநீர் நெருக்கடியினையும் இக்கிராம மக்கள் சமாளிக்க கூடிய நிலைமை உருவாகும். (நி-350)


# வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் ஆதனப் பெயர்மாற்றம்

## 150, அராலித்துறை வீதி, வட்டாரம்-07

வலிகாமம் மேற்கு பிரதேச சபை அராலி உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம்- 07 அராலித்துறை வீதியில் (வலது) உள்ள இல 150 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் கனகசபை இராஜேஸ்வரி என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை **கனகசபை தியாகராசா** ஆகியவர் தனது காலஞ்சென்ற சகோதரி கனகசபை இராசேஸ்வரிக்கு அவரின் பெற்றோரால் நன்கொடை வழங்கப்பட்டதென்றும் இவ்வாதனத்தை அவர் தனக்கு வாய்ச்சொல் மூலம் நன்கொடை வழங்கியிருந்தாரென்றும் அக்காலம் தொடக்கம் இவ்வாதனத்தில் தனது செலவில் கல்வீடு கட்டி குடும்பமாக வாழ்ந்து வருகின்றாரென்றும் அதன் பிரயோசன வருமானங்களை தானே பெற்று வருகின்றாரென்றும் இவ்வாதனத்தை தனது பிள்ளைகளுக்கு நன்கொடை வழங்க வேண்டியிருப்பதனாலும் மற்றும் தேவைகளுக்கும் எனவும் வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு து.பாக்கியநாதன் முகதாவில் 3793/29.06.2002 ஆம் இலக்கத்தில் வெளிப்படுத்தல் உறுதியொன்றினை நிறைவேற்றியிருந்தார்.

குறித்த கனகசபை தியாகராசா ஆகியவர் காலஞ்செல்ல அவருடைய ஏக வாரிசான பாமா வரதராசா ஆகியவருக்கு தந்தைவழி முதுசமாக குறித்த ஆதனம் வந்தடைந்தது.

**நடராசா தருமராசா** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு வே.த.மு.கதிர் காமநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட **15137/29.11.2014 ஆம்** இலக்க உறுதியால் குறித்த **பாமா வரதராசா** ஆகியவரிடமிருந்து குறித்த ஆதனத்தை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**கந்தசாமி கோபாலசிங்கம் பெண் தேவராணி** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு சின்னப்பு சிவபாலசுப்பிரமணியம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1110/18.03.2019 ஆம் இலக்க உறுதியால் குறித்த **நடராசா தருமராசாவும் பெண் சந்திரவதனியும்** ஆகியவர்களிடமிருந்து குறித்த ஆதனத்தை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த **கந்தசாமி கோபாலசிங்கம் பெண் தேவராணி** ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **கந்தசாமி கோபாலசிங்கம் பெண் தேவராணி** ஆகியவருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(9157)

**செயலாளர், வலிகாமம் மேற்கு பிரதேசசபை.**



# சேவைநலன் பாராட்டு

## திருமதி.பத்மினி மகாதேவன்

"B.sc, Dip in Edu"

(உயர்தரப் பிரிவு பகுதித் தலைவர்)

(இரசாயனவியல் ஆசிரியை)



சேவைக் காலம்

20.01.1989-27.04.1993

கைதடி முத்துக்குமார சுவாமி மகா வித்தியாலயம்

28.04.1993-11.02.1997

யா/ நாமகள் வித்தியாலயம்,கொக்குவில்

12.02.1997-09.10.2012

யா/கொக்குவில் இந்து கல்லூரி, கொக்குவில்

10.10.2012-18.02.2024

யா/இந்து மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்

**மாணாக்கர் கல்விக்கண் திறந்திட அயராது உழைத்த ஆசிரியரின் அளப்பரிய சேவையை உளமார வாழ்த்துகின்றோம்.**

(9150)

ஆசிரியர் நலன்புரிக் கழகம், யா/யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பாரதம்

## போர் நிறுத்த பேச்சுவார்த்தை இல்லை நெதன்யாகு திட்டவட்டம்

(காசா)

பாலஸ்தீனத்தின் காசா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் அமைப்பினரை ஒழிக்க இஸ்ரேல் நடத்தி வரும் போர் 4 மாதங்களுக்கும் மேலாக தொடர்கிறது. இடையில் ஹமாஸ் அமைப்பினர் வசம் உள்ள இஸ்ரேல் நாட்டை சேர்ந்த பிணைக்கைதிகளை விடுவிப்பதற்காக 7 நாட்கள் போர் நிறுத்தப்பட்டது.

அதன் பிறகு இஸ்ரேல் மீண்டும் தீவிர தாக்குதலை தொடர்ந்தது.

இதுவரை இஸ்ரேல் தாக்குதலில் குழந்தைகள், பெண்கள் உட்பட 28,000 பேருக்கும் மேல் உயிரிழந்துள்ளதாக பாலஸ்தீன சுகாதார துறை அறிவித்தது.

இதற்கிடையே ஹமாஸ் அமைப்பினர் வசம் மீதம் உள்ள நூற்றுக்கும் மேற்பட்ட இஸ்ரேலிய பிணைக்கைதிகளை மீட்கவும் மீண்டும் போர்நிறுத்தத்தை கொண்டு வரவும், எகிப்து மற்றும் கட்டார் நாடுகளின் தலையீட்டில் இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் அமைப்பினருக்கு இடையே பேச்சுவார்த்தை நடைபெற்றது.

இதில் ஹமாஸ் அமைப்பினர் நிரந்தர போர் நிறுத்தம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வைத்தனர்.

இவற்றை ஏற்க இஸ்ரேல் மறுத்து விட்டது.

இந்நிலையில், ஹமாஸ் அமைப்பினருடன் நடைபெற்ற போர்நிறுத்த பேச்சுவார்த்தை குறித்து இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கருத்து தெரிவித்தார். அப்போது அவர் தெரிவித்ததாவது.

ஹமாஸ் அமைப்பினரிடமிருந்து ஏமாற்றும் கோரிக்கைகளை தவிர வேறு எதுவும் வரவில்லை. அவர்களின் கோரிக்கைகளை ஏற்க முடியாது.

மேற்கொண்டு போர் நிறுத்த பேச்சுவார்த்தைக்கு இஸ்ரேல் செல்லாது.

பாலஸ்தீனியர்களுக்கு தனிநாடு அந்தஸ்து தொடர்பான சர்வதேச ஆணைகளுக்கு இஸ்ரேல் அடி பணியாது.

பாலஸ்தீனத்தை ஒரு தலைப்பட்சமாக அங்கீகரிப்பதை எனது தலைமையிலான இஸ்ரேல் தொடர்ந்து கடுமையாக எதிர்க்கும்.

முன் நிபந்தனைகள் இல்லாமல் இரு தரப்புக்கும் இடையே நேரடி பேச்சுவார்த்தை மூலம் மட்டுமே ஒரு பயனுள்ள ஏற்பாட்டை செய்ய முடியும் என அவர் தெரிவித்தார். (நி)

# நெதன்யாகுவி
# ஒன்று திரண்ட இ
## தேர்தலை நடத்துமாற

(டெல்அவிவ்)

**இஸ்ரேலில் முன்கூட்டித் தேர்தல் நடத்தும் யோசனையை பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு நிராகரித்ததால் டெல் கணக்கான இஸ்ரேலியர்கள் அரசாங்கத்திற்கு எதிராக ஈடுபட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன**



## டில்லியில் விவசாயிகளின் போராட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தம்



(டில்லி)

இந்திய தலைநகர் புது டில்லியில் விவசாயிகளினால் முன்னெடுக்கப்பட்டு வந்த போராட்டம் தற்காலிகமாக இடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

போராட்டக்காரர்களுக்கும் அரசாங்க அதிகாரிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தை இடம்பெற்றுவரும் நிலையில் போராட்டம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இந்திய விவசாயிகள் தமது உற்பத்திகளுக்கு அதிக விலை கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் அரசாங்க அதிகாரிகள் விவசாயிகளின் பிரச்சினை தொடர்பில் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளனர்.

விவசாயிகளின் தொழிற்சங்கத்திற்கும் அரசாங்க அதிகாரிகளுக்கும் இடையிலான இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளது.

இதன் பின்னர் போராட்டம் தொடர்ந்து முன்னெடுப்பதா அல்லது கைவிடுவதாக என தீர்மானிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (நி)

## சொத்து மதிப்பு குறித்து பொய்யான ட்ரம்பிற்கு 355 மில்லியன் டொலர்கள்

(வோஷிங்டன்)

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பிற்கு 355 மில்லியன் டொலர்கள் அபராதம் விதித்து நியூயோர்க் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

சொத்து மதிப்பு குறித்து பொய்யான தகவல்களை அளித்ததற்காக இந்த அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து பல ஆண்டுகளாக தன்னுடைய சொத்து மதிப்பு குறித்து தவறான தகவல்களை வழங்கி வந்ததாக ட்ரம்ப் மீது சிவில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கு விசாரணையின் நிறைவில், பெருந்தொகை அபராதம் செலுத்த வேண்டும் என நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.



டொனால்ட் ட்ரம்ப், அவருடைய இரு மூத்த மகன்கள், அவருடைய நிறுவனம், நிர்வாகிகள் ஆகியோர் திட்டமிட்டு தங்கள் சொத்துகள் பற்றி பொய்யான நிதி விபரங்களை வங்கிகள், காப்பீட்டு நிறுவனங்கள் போன்றவற்றுக்கு அளித்து தொடர்ந்து ஏமாற்றி வந்துள்ளனர்.

இந்த தீர்ப்பு காரணமாக ட்ரம்ப் குடும்பத்தினர் நடத்தி வரும் வணிக நிறுவனம் பெரும் பாதிப்பை சந்தித்துள்ளதுடன்,

நீதிமன
பார்வை
வேண்
நேர்ந்தி
மேலு
வரும்
தலில் கு
வேட்பா
கூடிய வ
வந்த
பிற்கு டெ
ஏற்பட்டு
ட்ரம்
355 மி
கள் என
ள்ள பே
சட்டப்ப
வட்டியு
வேண்
அவர்
மில்லிய
செலுத்
கும்
ப்பட்டுள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விற்கு எதிராக இஸ்ரேலியர்கள்

## றாறு கோரி ஆர்ப்பாட்டம்

**னையை அந்த நாட்டின் டெல் அவிவில் ஆயிரக் திராக ஆர்ப்பாட்டத்தில் ன்றன.**






இஸ்ரேல் மீது ஹமாஸ் தாக்குதல் நடத்த ஆரம்பித்தப் பின்னர் தற்போதைய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தமது ஆட்சியில் சரிவை எதிர் கொண்டு வருவதாக குறிப்பிடப்படுகிறது.

இந்தநிலையில் தேர்தலை விரைவாக நடத்தக் கோரி மக்கள் டெல் அவிவ் நகரில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தேர்தலுக்காக 2026 ஆம் ஆண்டுவரை காத்திருக்க முடியாதென ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தநிலையில் இஸ்ரேலில் முன்கூட்டிதேர்தல் நடத்துவதற்கான யோசனையை இஸ்ரேலிய பிரதமர் நிராகரித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிகின்றன. (நி)

## அமெரிக்காவில் தீ விபத்து ஒருவர் பலி- 11 பேர் காயம்



(வோஷிங்டன்)

அமெரிக்க மாநிலத்தில் பரபரப்பான பகுதியான ஸ்டெர்லிங்கில் உள்ள வர்ஜீனியா வீட்டில் தீவிபத்து ஏற்பட்டுள்ளது

குறித்த தீவிபத்தில் சிக்கி ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் 11 பேர் காயமடைந்துள்ளனர்.

மேலும் காயமடைந்தவர்களில் தீயணைப்பு படையைச் சேர்ந்த ஒன்பது பேரும் இரண்டு பொதுமக்களும் அடங்குவர்.

தீ விபத்திற்கான காரணம் தெரியவராத நிலையில் அதிகாரிகள் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (நி)

## தாய்லாந்தின் முன்னாள் பிரதமர் சிறப்பு பரோலில் விடுதலை



(பாங்கொக்)

தாய்லாந்தின் முன்னாள் பிரதமர் தக்சின் நேற்று பரோலில் விடுதலை செய்யப்பட்டார். தென்கிழக்கு ஆசியாவில் இந்தோசீன தீபகற்பத்தில் உள்ள நாடு தாய்லாந்து. இதன் தலைநகரம், பாங்கொக்

தாய்லாந்தில், 2001 முதல் 2006 வரை பிரதமராக இருந்த தக்சின் சினவத்ரா மீது அரிசி மானிய திட்டத்தில் அரசுக்கு நஷ்டம் ஏற்படுத்தியதாக வழக்கு தொடரப்பட்டது. இதில் தக்சினுக்கு சிறை தண்டனை விதிக்கப்பட்டது.

சிறை தண்டனையில் இருந்து தப்பிக்க தக்சின், 2008இல் தாய்லாந்தை விட்டு வெளியேறி, 15 ஆண்டுகள் அயல்நாடுகளில் தங்கி இருந்தார். கடந்த 2023இல் மீண்டும் நாடு திரும்பினார்.

தாயகம் திரும்பிய தக்சினுக்கு பல்வேறு குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் 8 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டது.

கடந்த 2023 ஒகஸ்ட் மாதம் தக்சின் சிறையில் அடைக்கப்பட்டார். இந்நிலையில் அவருக்கு திடீர் உடல் நலக்குறைவு ஏற்பட்டதால் சிறையிலிருந்து 6 மாதங்கள் மருத்துவமனையிலேயே காவலில் வைக்கப்பட்டிருந்தார். தக்சினின் உடல்நல குறைபாடு காரணமாக அவருக்கு விதிக்கப்பட்ட 8 ஆண்டு கால சிறைதண்டனையை தாய்லாந்து மன்னர் மகா வஜிரலோங்கோர்ன் 1 ஆண்டாக குறைத்தார். இதனை தொடர்ந்து தக்சின் சினவத்ராவுக்கு சிறப்பு பரோல் வழங்கி அரசு உத்தரவிட்டது.

இதையடுத்து, தற்போது 76 வயதாகும் தக்சின் நேற்று பரோலில் விடுதலை செய்யப்பட்டார். பாங்கொக் மருத்துவமனையில் இருந்து வெளியே வந்த தக்சின் தனது காரில் புறப்பட்டு சென்றார். தக்சினை அவரது மகள் பெடோங்டார்ன் சினவத்ரா வரவேற்று தங்கள் இல்லத்திற்கு அழைத்து சென்றார்.

தக்சின், 2 முறை தாய்லாந்தின் பிரதமராக இருந்தார். தாய்லாந்தில் நடைபெறும் பிரதமர் சிரெத்தா தவிசின் தலைமையிலான கூட்டணி ஆட்சிக்கு, தக்சின் குடும்பத்தார் பின்புலமாக உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

## யான தகவல் ர்கள் அபராதம்

நீதிமன்றத்தின் மேற்பார்வையின் கீழ் செயற்பட வேண்டிய கட்டாயமும் நேர்ந்திருக்கிறது.

மேலும், இதனால் எதிர் வரும் ஜனாதிபதி தேர்தலில் குடியரசுக் கட்சியின் வேட்பாளராக போட்டியிடக் கூடிய வகையில் முன்னேறி வந்த டொனால்ட் ட்ரம்பிற்கு பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

ட்ரம்ப்க்கு அபராதம் 355 மில்லியன் டொலர்கள் என குறிப்பிடப்பட்டுள்ள போதும் அமெரிக்க சட்டப்படி அபராதத்தை வட்டியுடன் செலுத்த வேண்டும் என்பதால் அவர் சுமார் 450 மில்லியன் டொலர்களை செலுத்த வேண்டியிருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## பாகிஸ்தான் பாராளுமன்ற தேர்தலில் முறைகேடு தேர்தல் ஆணையர், தலைமை நீதிபதி மீது புகார்



(இஸ்லாமாபாத்)

கடந்த 8 ஆம் திகதி பாகிஸ்தான் பாராளுமன்றத்தின் 266 தொகுதிகளுக்கு தேர்தல் நடைபெற்றது. இதுவரை வெளியான முடிவுகளில் இம்ரான் கான் ஆதரவாளர்கள் 93 தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளனர். நவாஸ் ஷெரீபின்பாகிஸ்தான் முஸ்லிம் லீக்-என் 75 தொகுதிகளிலும், பிலாவல் புட்டோவின் பாகிஸ்தான் மக்கள்கட்சி 54 தொகுதிகளிலும் வெற்றிபெற்றுள்ளன.

இந்த சூழலில் ராவல்பிண்டி தேர்தல் ஆணையர் லியாகத் அலி நேற்று முன்தினம் கூறியதாவது பாராளுமன்ற தேர்தலில் பல முறைகேடுகள் நடைபெறுகின்றன.

இதற்கு தலைமை தேர்தல் ஆணையரும், உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியும் உறுதுணையாக உள்ளனர். பல்வேறு தொகுதிகளில் சுயேட்சை வேட்பாளர்கள் சுமார்80,000 வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலையில் இருந்தனர். ஆனால், போலி வாக்குச்சீட்டுகள் மூலம் மற்ற கட்சி வேட்பாளர்களை வெற்றி பெறச் செய்துள்ளனர். இந்த மோசடியை தண்டித்து எனது பதவியை ராஜினாமா செய்கிறேன். இவ்வாறு அவர் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார வளர்ச்சி மந்தகதியில் இருக்கும்

**வெளிநாடுகளுக்குச் செல்லும் இலங்கையர்களின் அதிகரிப்பே காரணம் என்கிறது மத்திய வங்கி**

(கொழும்பு)

**பொருளாதார வளர்ச்சியானது கணிக்கப்பட்ட அளவை விட குறையும் அபாயம் இருப்பதாக இலங்கை மத்திய வங்கி எச்சரித்துள்ளது.**

திறன்மிக்க இலங்கையர்கள் வெளிநாடுகளுக்கு படையெடுப்பது உற்பத்தித் திறனை பாதிப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியால் அண்மையில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும், உலகத் துறையில் சாதகமற்ற போக்குகள் ஏற்றுமதித் துறையின் மீட்சியையும் திறன்மிக்க இலங்கை தொழிலாளர்கள் வெளிநாடுகளுக்கு படையெடுப்பது உற்பத்தித் திறனையும் பாதிக்கிறது.

இதன் காரணமாக குறுகிய கால மற்றும் நீண்டகால பொருளாதார வளர்ச்சி குறையும் அபாயம் உள்ளது.

தற்போது கணிக்கப்பட்டுள்ள படி, குறுகிய காலத்திற்கு பொருளாதார வளர்ச்சி மெதுவாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால் பொருளாதாரம் படிப்படியாக அதிக வளர்ச்சி நிலைக்கு வரும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (நி)

# சமாதான நீதவான் நியமனம்; கல்வித்தகைமையில் மாற்றம்

(கொழும்பு)

சமாதான நீதவான் நியமனத்தைப் பெறுவதற்கான கல்வித் தகைமையில் மாற்றம் கொண்டு வரப்பட்டுள்ளது.

அதன்படி க.பொ.த உயர்தரப் பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியடைய வேண்டும் என்ற நிபந்தனை க.பொ.த சாதாரண தரமாக குறைக்கப்பட்டுள்ளது.

நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷவினால் கடந்த நவம்பர் 27ஆம் திகதி வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானியில், சமாதான நீதவான் நியமனத்திற்கான கல்வித் தகைமை மூன்று உயர்தரப் பாடங்களாக இருக்க வேண்டும் என நிபந்தனை விதிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் அந்த விதியை திருத்தியமைத்து, கடந்த 13 ஆம் திகதி மற்றுமொரு சிறப்பு வர்த்தமானி அறிவிப்பை வெளியிட்ட நீதித்துறை அமைச்சர், க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேல் இல்லாது ஆறு பாடங்களில் C தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என நிபந்தனை விதித்துள்ளார்.

அப்படியிருந்தும், ஒருவருக்கு அந்தத் தகுதி இல்லாவிட்டாலும், ஒரு புகழ்பெற்ற மதத் தலைவரோ அல்லது ஒரு சங்கத் தலைவரோ அவர் சமூகத்திற்குச் செய்யும் முன்மாதிரியான சேவையைக் கருத்தில் கொண்டு சமாதான நீதியரசராக நியமிக்கத் தகுதியானவர் என்று பரிந்துரைத்தால், நீதி அமைச்சர் பரிசீலித்து அந்த நபரை சமாதான நீதிபதியாக நியமிக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)


# ஈரான் வெளிவிவகார அமைச்சர் இலங்கை விஜயம்

(கொழும்பு)

ஈரானின் வெளிவிவகார அமைச்சர் ஹொசைன் அமீர் அப்துல்லாஹெய்ன் இலங்கைக்கு விஜயமொன்றினை மேற்கொள்ளவுள்ளார்.

இஸ்ரேலிய போக்குவரத்து அமைச்சர் மிரி ரெகெவ் கொழும்புக்கு விஜயம் செய்த சில நாட்களே ஆகியுள்ள நிலையிலேயே அவர் இன்று வருகை தரவுள்ளார்.

குறித்த இரண்டு நாள் விஜயத்தை முன்னிட்டு ஈரானிய கடற்படையின் இரண்டு கப்பல்கள் முறையான அழைப்பின் பேரில் நேற்று முன்தினம் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளன.



கொழும்பில் உள்ள வெளிவிவகார அமைச்சு இது ஒரு "நல்எண்ண" விஜயம் என குறிப்பிட்டுள்ளது.

கடந்தாண்டு ஓகஸ்ட் மாதம் டெஹ்ரானுக்கு விஜயம் செய்திருந்த இலங்கை வெளியுறவு அமைச்சரின் அழைப்பின் பேரில் அமீர் அப்துல்லாஹெய்ன் இலங்கை வருகை தரவுள்ளார்.

# இன்று ஒரு தகவல் 41



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## நீண்ட ஆயுள்

ஒரு நாள் தற்கொலை பற்றிய சில விபரங்களை சொல்லிக் கொண்டு இருந்தோம்! அதைக்கேட்டு றொம்ப வேகமாக ஒருத்தர் வந்தார். அவர் வந்த வேகத்தை பார்த்தால் எனக்கு கொஞ்சம் பயமாகத்தான் இருந்தது. அவ்வளவு வேகமாக வந்தார்.

அந்த தகவலை கேட்டு விட்டு சேர் எந்த முடிவுக்கு வந்தாரோ தெரியவில்லையே என்று தலையை பிச்சுக்கணும் போல இருந்தது எனக்கு. பிரக்டிக்கலா அது முடியாத காரியம் என்பதனாலே அமைதியாக இருந்தேன். வந்தவர் சொன்னார்! சார் தற்கொலை செய்து விட்டு அரை குறையிலே செத்துப்போறவர்களைப் பற்றி காலை நேரத்தில் என்னத்திற்கு சொல்லிக் கொண்டு இருக்கிறீர்கள்.

அதை விட தீர்க்காயுசா சௌக்கியமாக வாழ்கின்றவர்களைப் பற்றி ஏதாவது விபரம் இருந்தால் சொல்லக் கூடாதா? சொல்லவில்லை என்றால் விடமாட்டார் போல இருந்தது. உடனே தேட ஆரம்பித்ததிலே சில விடயங்கள் கிடைத்தன.

உலகத்திலே அதிக காலம் உயிரோட வாழ்ந்த மனிதன் யார்? ஆதாரபூர்வமாக கிடைத்த தகவலின் படி அவர் ஒரு ஜப்பான்காரர். அவர் பெயர் "சிக்ஷியோ இசுமி". இவர் 1986 பெப்ரவரி 21 இல் தான் இறந்து போனார்.

அந்த சமயத்தில் இவருக்கு வயது 120 வருடம் 237 நாட்கள். ஜப்பானிலே உள்ள மிகவும் பின்தங்கிய தீவு ஒன்றிலே பிறந்து வளர்ந்தவர். கடுமையான உழைப்பாளியாம். மிகவும் வயதான காலத்திலேயும் உடற்பயிற்சி செய்வாராம். மீன், காய்கறி இதெல்லாம் நிறைய சாப்பிடுவாராம். மற்றைய மாமிசங்களை மிகவும் குறைவாகத் தான் சாப்பிடுவாராம்.

சோவியத் யூனியனிலே இது சம்பந்தமான சில ஆராய்ச்சிகள் நடந்தது. அங்கே 1960 இல் பெண்களுடைய சராசரி வயது 73.6. ஆண்கள் 64.05.1972 இல் பார்த்தா இது படிப்படியாக குறைந்து கொண்டே வந்திருக்கு.

அப்போ பெண்களின் சராசரி வயது 72.6, ஆண்கள் 62.4. அப்படி என்றால் இப்போது குறைந்து இருக்கும் என்று அல்லவா நினைக்கிறீர்கள். அது தான் இல்லை. இப்போது அங்கே பெண்களோட சராசரி வயது 73.6, ஆண்கள் 65. இது எப்படி சாத்தியமாகியது என்று நினைக்கிறீர்களா? மதுபானங்களுக்கு எதிரான பிரசாரம்தான். மதுபான உபயோகம் குறையக் குறைய வயது கூடிக்கொண்டே வருகிறது. அதுமட்டுமில்லை சாலை விபத்துக்களும் 37 சதவிகிதம் குறைந்து விட்டதாம்.

பொதுவாக உலகத்திலே அதிக வயதானவர்கள் இருக்கின்ற நாடுகள் இரண்டு. ஸ்கண்டிநேவியா, ஜப்பான். ஆனால் சோவியத் யூனியன் ஆய்வாளர் கோஸ்லோவ் என்ன சொல்கிறார் என்றால் அவர் பார்த்த வரையில் காகசஸ் மலைப்பகுதியில் இருக்கிறவர்கள் தான் அதிக நாட்கள் இருக்கிறார்கள் என்று சொல்கிறார்.அந்த பகுதியிலே இருக்கிறவர்களுடைய அதிகபட்ச வயது 150. அவர்கள் அதிக காலம் வாழ்வதற்கு என்ன காரணம். அதற்கு கோஸ்லோவ் என்ன சொல்கிறார் தெரியுமா?

பொதுவாக மலைப்பகுதியில் உயிரினங்களுடைய வளர்ச்சி கொஞ்சம் குறைவாக தான் நடக்குமாம். இதைத்தவிர இயற்கை சூழ்நிலை, காய்கறிகள், தயிர் இது எல்லாம் தான் காரணமாம். இன்னொரு முக்கிய காரணம் அவர் ஆய்வில் இருந்து தெரிந்து கொள்ள முடிந்தது. தனிமனிதன் நல்லதாக நடந்து கொண்டால் மட்டும் போதாதாம். சமூகமே நல்ல நெறியிலே நடந்து கொள்வதும் ஒரு காரணமாம்.அந்த ஊரில் வயதானவர்களுக்கு சிறுவர்கள் மரியாதை கொடுக்கிறார்களாம். கிழம் எப்போது மண்டையைப் போடும் என்று முணுமுணுப்பதில்லை.

அவர்களுக்கு வேண்டியதை செய்து கொடுப்பார்களாம். இதனாலே அங்கே அவர்களுக்கு எல்லாம் மன இறுக்கம் குறையுதாம். ஒருத்தர் வீட்டிலே ஒரு துக்கம் என்றால் அமை அந்த ஊரிலே எல்லோரும் வந்து பகிர்ந்து கொள்ளுவாங்களாம். அதனாலே கோபம் சிதைந்து போகிறது. பொறாமை வருவதற்கும் வாயப்பு இல்லை அல்லவா. பெரியவர்கள் அனுபவ முதிர்ச்சியாலே சரியான வழியைக் காட்டுகிறார்கள். இளைய தலைமுறையினர் அந்த வழியிலே போறதாலே துன்பங்கள் வருவதில்லை.

பெரியவர்கள் பேச்சை கேளுங்கள் என்று சொல்லுவது எதற்காக? பிரச்சினைகளுக்கு முடிவு எடுப்பது அவர்களுக்கு சுலபம். ஏனென்றால் அவர்கள் சொல்கிறபடி கேட்டால் இளைஞர்களுக்கு கஷ்டம் இல்லை. அதாலே இரண்டு தலைமுறையினரும் நீண்ட ஆயுளோட வாழ முடியும்.

இது எல்லாம் வெறும் உபதேசம் என்று யாரும் நினைத்து விடாதீர்கள். ஆராய்ச்சியோட முடிவுகள். நீண்டநாள் ஆரோக்கியமாக வாழ்வதற்கு விஞ்ஞானிகள் சில நல்ல யோசனை சொல்லியிருக்கிறார்கள். காற்றோட்டமான இடத்திலே இருங்க. முடிந்தால் திறந்த வெளியில் தூங்குங்கள். மூச்சை ஆழ்ந்து இழுத்து விடுங்க. அளவோட சாப்பிடுங்க. இறைச்சி மசாலா சாமானை குறைத்து கொள்ளுங்கள். உணவை மென்று சாப்பிடுங்க. விழுங்காதீர்கள். நடக்கும் போதும் இருக்கும் போதும் நிற்கும் போதும் முதுகெலும்பு வளையாம பார்த்துக் கொள்ளனும்.

தினமும் பற்களை தீட்டி பல்லு ஈறுகளை சுத்தமா வைத்துக் கொள்ளனும்.அளவுக்கு மீறி வேலை செய்யக் கூடாது. தினமும் 7மணி நேரமாவது தூங்குங்க. கோபம், கவலை இவை இரண்டையும் முடிந்த அளவுக்கு குறைத்து கொள்ளுங்கள். இது தான் விஞ்ஞானிகள் சொல்லும் யோசனைகள்.


கதை ஒன்று கேள்விப்பட்டிருப்பீங்க. ஒரு பெரியவருக்கு நூறாவது பிறந்த நாள் நடந்ததாம். விழாவிற்கு வந்தவர்கள் எல்லாம் இவர் நூறு வருடம் வாழ்வதற்கு என்ன காரணம் என்று கேட்டார்களாம். அதற்கு அவர் நான் புகைப்பிடிப்பது இல்லை, மது அருந்துவது இல்லை, மாமிசம் புசிப்பது இல்லை அது தான் காரணம் என்றாராம்.

இவர் அப்படி சொல்லிக் கொண்டு இருக்கும் போது மாடியிலே தடால் என்று ஒரு சத்தம். என்ன சத்தம் அது என்று கேட்டார்கள். அதற்கு அவர் அது ஒன்றுமில்லை. மாடியில் இருக்கும் எனது அப்பா தான் எப்ப பார்த்தாலும் தண்ணி போட்டு கொண்டு ஆடிக்கொண்டு இருப்பார். அவருக்கு எல்லா கெட்ட பழக்கமும் உண்டு என்று சொன்னாராம்.

இது சும்மா தமாசாக சொல்லப்பட்ட கதை. இதை யாரும் சீரியசாக எடுத்து கொண்டு அந்த வழியிலே சென்று எல்லோரும் கெட்டுப்போக ஆரம்பித்து விடாதீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாசி மாத இராசிபலன்கள் 13.02.2024–13.03.2024



தனுசு இராசி வாசகர்களே!

மூலம்: தன புத்திரக்காரகனான குரு. ஞான மோட்ச காரகனான கேதுவின் அம்சத்தில் பிறந்த உங்களுக்கு தெய்வ அருள் எப்போதும் இருக்கும். எல்லாவற்றையும் சிந்தித்து செயற்படக் கூடியவர்களாக நீங்கள் இருப்பீர்கள். இந்த மாதத்தில் உங்கள் இராசிநாதன் பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் சஞ்சரித்து உங்கள் இராசியை பார்ப்பதால் உங்கள் நிலையில் நீங்கள் எதிர்பார்த்த மாற்றங்கள் உண்டாகும். அந்தஸ்தும் செல்வாக்கும் உயரும்.

தெய்வ அருள் முழுமையாக உங்களுக்கு ஏற்படும். லாப ஸ்தானத்திற்கும் குருபகவானின் பார்வை பதிவதால் வருமானத்தில் இருந்த நெருக்கடி விலகி எதிர்பார்த்த வருமானம் உண்டாகும். உத்தியோகத்தில் இருந்த பிரச்சினைகள் முடிவிற்கு வரும். புதிய தொழில் தொடங்கும் எண்ணம் நிறைவேறும். சிலருக்கு எதிர்பார்த்த இடமாற்றம், பதவி உயர்வு ஏற்படும். குடும்பத்தில் இருந்த சங்கடங்கள் விலகும். பெண்களுக்கு இந்த மாதம் யோகமான மாதமாக இருக்கும். பொன், பொருள் சேர்க்கை உண்டாகும். திருமண வயதினருக்கு வரன் தேடி வரும். குழந்தைக்காக ஏங்கியவர்களுக்கு அந்த பாக்கியம் உண்டாகும். வெளிவட்டாரத்தில் உங்கள் மதிப்பு அதிகரிக்கும். பணிபுரியும் இடத்தில் செல்வாக்கு உயரும். விவசாயிகள் நிலையில் இருந்த சங்கடங்கள் விலகி ஆதாயமான நிலை ஏற்படும். மாணவர்களுக்கு கல்வியில் கூடுதல் கவனம் உண்டாகும்.

சந்திராஷ்டமம்: பெப்.22,23

அதிர்ஷ்ட நாள்:பெப்.16, 21, 25, மார்ச் 3,7,12

பரிகாரம்: முருகனை வழிபட வாழ்வில் முன்னேற்றம் உண்டாகும்.

பூராடம்: அறிவாற்றலையும் அந்தஸ்தையும் வழங்கும் குருபகவான், அதிர்ஷ்டக் காரகனான சுக்கிரனுடைய அம்சத்தில் பிறந்திருக்கும் உங்களுக்கு எந்த ஒன்றிலும் ஆழ்ந்த அறிவு இருக்கும். தெளிவான சிந்தனை இருக்கும். எந்த ஒன்றிலும் யோசிக்காமல் ஈடுபடமாட்டீர்கள். இந்த மாதத்தில் உங்கள் ராசிக்கு மூன்றாம் இடத்தில் ராஜகிரகமான சூரியனும், கர்மகாரகனான சனிபகவானும் சஞ்சரிப்பதால் இதுவரையில் உங்களுக்கிருந்த சங்கடங்கள் விலகும். சமூகத்தில் செல்வாக்கும் அந்தஸ்தும் உயரும்.

அரசு வழியில் நீங்கள் மேற்கொள்ளும் முயற்சிகளில் ஆதாயம் ஏற்படும். தெய்வ அருளால் செயல்கள் அனைத்தும் வெற்றியாகும். உங்கள் நட்சத்திர நாதன் இராசிக்குள்ளாகவே சஞ்சரிப்பதால் எதிர்பார்த்த வரவுகள் வந்து சேரும். குடும்பம், தொழில், வியாபாரம் போன்றவற்றில் இருந்த நெருக்கடி விலகும். அரசியல்வாதிகளின் செல்வாக்கு உயரும். பணியிடத்தில் பணியாளர்களின் மதிப்பு அதிகரிக்கும். பணியில் இருந்த சங்கடங்கள் விலகும். உடல்நிலையில் ஆரோக்கியம் ஏற்படும்.

பெண்களுக்கு இந்த மாதம் எதிர்பார்த்த பலன்கள் கிடைக்கும். வாழ்க்கைத் துணையுடன் இருந்த சங்கடங்கள் விலகும். திருமண வயதினருக்கு வரன் வந்து சேரும். வாழ்க்கைத் துணையை இழந்தவர்களுக்கு மறுமணத்திற்குரிய நல்ல சூழ்நிலை ஏற்படும். வேலை தேடுபவர்களுக்கு எதிர்பார்த்த தகவல் வரும். அரசுவழியில் ஆதாயமான நிலை ஏற்படும்.




விவசாயிகளுக்கு யோகமான மாதமாக இருக்கும். விளைபொருளுக்கு எதிர்பார்த்த விலை கிடைக்கும். மாணவர்கள் மாதத்தின் பிற்பகுதியில் கல்வியில் ஆர்வம் காட்டுவர்.

சந்திராஷ்டமம்: பெப்.23,24.

அதிர்ஷ்ட நாள்:பெப்.15,21,மார்ச் 3,6,12

பரிகார்ரம்: பெருமாளை வணங்கினால் செல்வம் பலமடங்கு உயரும்.

உத்திராடம் 1 ஆம் பாதம்: ஞானக்காரகன் குரு. ஆற்றல் காரகனானசூரியன் அம்சத்தில் பிறந்த உங்களுக்கு அறிவாற்றலோடு எந்த ஒன்றையும் செய்து முடிக்கும் தைரியமும் துணிச்சலும் இருக்கும். திட்டமிட்டு செயற்படக் கூடியவர்களாக இருப்பீர்கள்.

இந்த மாதம் உங்கள் நட்சத்திர நாதன் மூன்றாம் இடத்தில் சஞ்சரிப்பதால் உங்கள் முயற்சிகள் யாவும் வெற்றியாகும். நினைத்ததை சாதித்து முடிப்பீர்கள். அரசு வழியில் மேற்கொண்ட முயற்சி வெற்றியாகும். உத்தியோகத்தில் ஏற்பட்ட பிரச்னைகள் விலகும். வம்பு வழக்குகள் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

சொத்து விவகாரத்தில் ஏற்பட்ட பிரச்சினைகள் முடிவிற்கு வரும். மூன்றாம் இடத்தில் சனிபகவான் சஞ்சரிப்பதால் அரசியல்வாதிகளின் செல்வாக்கு உயரும். சிலருக்கு புதிய பதவி வந்து சேரும். மக்கள் செல்வாக்கு உண்டாகும். குருபகவான் பார்வை உங்கள் இராசிக்கு உண்டாவதால் இக்காலத்தில் குடும்பம், வாழ்க்கை, தொழிலில் எதிர் பார்ப்பு நிறைவேறும். திருமண வயதினருக்கு வரன் தேடி வரும்.

பெண்களுக்கு யோகமான மாதமாக இருக்கும். அரசு பணியில் இருப்பவர்களுக்கு நெருக்கடிகள் விலகும். எதிர்பார்த்த இடமாற்றம், பதவி உயர்வு உண்டாகும். விவசாயிகளின் விலைபொருளுக்கு எதிர்பார்த்த விலை கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் கூடுதல் கவனம் செலுத்துவதால் மதிப்பெண் கூடும்.

சந்திராஷ்டமம்: பெப். 24,25

அதிர்ஷ்ட நாள்: பெப். 19,21,28,மார்ச் 1,3,10,12.

பரிகாரம்: வீரபத்திரரை வழிபட நன்மைகள் அதிகரிக்கும்.



மகர இராசி வாசகர்களே!

**உத்திராடம் 2,3,4 ஆம் பாதம்:** ஆயுள் காரகன் கர்மக் காரகனான சனி பகவான், ஆத்ம காரகனான சூரியன் அம்சத்தின் பிறந்த உங்களுக்கு ஒரு பக்கம் செயலில் வேகம் இருக்கும். மறு பக்கம் நிதானித்து செய்ய வேண்டும் என்ற எண்ணம் இருக்கும். இந்த இரண்டிற்கும் இடையில் உங்கள் வாழ்க்கை ஓடிக்கொண்டிருக்கும். இந்த மாதம் உங்கள் இராசிக்கு மூன்றாம் இடத்தில் சஞ்சரிக்கும் ராகு பகவான் உங்கள் முயற்சிகளை லாபமாக்குவார். முன்னேற்றத்தை உண்டாக்குவார். வெளிநாட்டு தொடர்புகளின் வழியாக ஆதாய த்தை ஏற்படுத்துவார். மனதில் தன்னம்பிக்கையும், தைரியமும் அதிகரிக்கும்.

இரண்டாம் இடத்தில் சனிபகவானும் சூரியனும் சஞ்சரிப்பதால் வார்த்தைகளில் நெருப்பு வெளிப்படும். குடும்பத்தில் நீங்கள் எதிர்பார்த்த நிலை இல்லாமல் போகும். மற்றவர்களின் எதிர்ப்புக்கு ஆளாக நேரிடும் என்பதால் முடிந்தவரை அமைதி காப்பது நல்லது. குருபகவானின் பார்வை உங்கள் தொழில் ஸ்தானத்தில் பதிவதால் தொழில் மீது கூடுதல் கவனம் செலுத்துங்கள். லாபம் அதிகரிக்கும். விழிப்புடன் செயற்படுங்கள். அனைவரையும் அனுசரித்துச் செல்லுங்கள். புதிய தொழில் முயற்சிகளில் யோசித்து இறங்குங்கள்.

பெண்களுக்கு எதிர்பார்ப்புகள் நிறைவேறும். வாழ்க்கைத் துணையுடன் ஏற்பட்ட சங்கடங்கள் விலகும். தெய்வ அருள் உண்டாகும். நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும். சிலர் புதிய வீட்டில் குடியேறுவீர்கள். குடும்பத்திற்குள் சில சங்கடங்கள் ஏற்பட வாய்ப்பிருப்பதால் குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வது நல்லது. விவசாயிகளுக்கு வருமானத்தில் இருந்த தடைகள் விலகும். எதிர்பார்த்த லாபம் காண்பீர்கள். மாணவர்களுக்கு படிப்பின் மீது அதிக அக்கறை செலுத்துவது அவசியம். ஆசிரியர்களின் ஆலோசனையை ஏற்பது நன்மை தரும்.

சந்திராஷ்டமம்: பெப். 24,25

அதிர்ஷ்ட நாள்: பெப்.17,18,26, மார்ச் 8,10

பரிகாரம்: நரசிம்மரை வணங்கினால் மனதில் நிம்மதி நிலைக்கும்.

**திருவோணம்:** மனக்காரகனான சந்திரன், ஆயுள் காரகனான சனிபகவான் அம்சத்தில் பிறந்த உங்களுக்கு மன வலிமை அதிகமாக இருக்கும். எந்த ஒரு செயலிலும் நீங்கள் வெற்றி பெறும் வரை உங்கள் முயற்சிகளை மேற்கொள்வீர்கள். இந்த மாதம் உங்களுக்கு சுக்கிர பகவான் உங்கள் ஜென்ம இராசிக்குள்ளும் குடும்ப ஸ்தானத்திலும் சஞ்சரிப்பதால் உங்கள் முயற்சிகள் யாவும் வெற்றியாகும். எதிர்பார்த்த வரவு இருக்கும். குடும்பத்தில் நிம்மதியான சூழ்நிலை உண்டாகும். குருபகவானின் பார்வை தொழில் ஸ்தானத்தில் பதிவதால் புதிய தொழில் தொடங்கும் முயற்சி வெற்றியாகும். சிலர் செய்யும் தொழிலை விரிவு செய்வீர்கள். தொழிலுக்காக மேற்கொள்ளும் முயற்சிகள் வெற்றியாகும். சனிபகவானின் பார்வை லாப ஸ்தானத்தில் பதிவதால் தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் உண்டாகும். பொருளாதார நெருக்கடி விலகும். கடன்களை அடைத்து நிம்மதி அடைவீர்கள். சிலர் வெளிநாட்டு தொடர்புடைய தொழில்களில் ஈடுபட்டு லாபம் காண்பீர்கள். அலுவலகத்தில் இருந்த பிரச்சினைகள் சுமூகமாகும்.

செல்வாக்கு அதிகரிக்கும். பெண்களின் விருப்பங்கள் இந்த மாதம் எளிதாக நிறைவேறும். சிலர் தங்கள் பெயரில் இடம் வாங்குவர். புதிய வீட்டில் குடியேறுவீர்கள். குடும்பத்திற்குள் சலசலப்புகள் வந்து செல்லும் என்றாலும் அதை




சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். உடல் நிலையில் சங்கடம் விலகி ஆரோக்கியமாக செயற்படுவீர்கள். விவசாயிகள் புதிய முயற்சியில் ஈடுபட்டு லாபம் அடைவர். மாணவர்களுக்கு கல்வியில் அதிக அக்கறை தேவை.

சந்திராஷ்டமம்: பெப்.25.

அதிர்ஷ்ட நாள்: பெப்.17,20,26, மார்ச் 2,8,11

பரிகாரம் சிவனை பிரதோஷத்தன்று வழிபட்டால் பிரச்சினை விலகும்.

**அவிட்டம் 1,2 ஆம் பாதம்:** தைரிய வீரிய பராக்ரமகாரகனான செவ்வாய், ஆயுள் காரகனான சனியின் அம்சத்தில் பிறந்திருக்கும் உங்களுக்கு, ஒவ்வொரு செயலிலும் அதிக முயற்சி தேவைப்படும். சில நேரங்களில் அதில் தடைகளும் ஏற்படும் என்றாலும், துணிச்சலுடன் செயற்படுவீர்கள். நினைத்ததை சாதிக்கும் வரை ஓயாமல் உழைப்பீர்கள். இந்த மாதம் ராசிக்குள் உங்கள் நட்சத்திரநாதன் செவ்வாய் சஞ்சரிப்பதால் செயல்களில் வேகம் இருக்கும். மூன்றாம் இடத்தில் சஞ்சரிக்கும் ராகுவால் முயற்சி வெற்றியாகும். சிலர் புதிய தொழில் தொடங்குவர். ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவீர்கள். வெளிநாட்டு தொடர்புடைய வியாபாரங்களில் ஆதாயம் அதிகரிக்கும். தொழிற்சாலை, ஹார்டுவேர்ஸ், பேக்டரி, ரியல் எஸ்டேட், பில்டர்ஸ் போன்ற தொழில்கள் செய்வோருக்கு இந்த மாதம் யோகமாக இருக்கும். சுக்கிர பகவான் மாதம் முழுவதும் ஜென்ம ராசி, இரண்டாம் இடத்தில் சஞ்சரிப்பதால் வருமானம் அதிகரிக்கும். பொன், பொருள் சேர்க்கை உண்டாகும். சிலர் புதிய வாகனம் வாங்குவர். பெண்களுக்கு இது யோகமான மாதம். குரு பகவானின் பார்வை உடல் நிலையில் இருந்த சங்கடங்களை விலக்கும். சுயதொழில் செய்வோருக்கு ஆதாயம் அதிகரிக்கும். பணியாளர்களின் சங்கடங்கள் விலகும். விவசாயிகள் நவீன விவசாயத்தில் ஈடுபட்டு லாபம் காண்பர். கால் நடை வளர்ப்பில் ஆதாயம் உண்டாகும். மாணவர்களுக்கு கல்வியில் நாட்டம் ஏற்படும்.

சந்திராஷ்டமம்: பெப்.26

அதிர்ஷ்ட நாள்: பெப்.17, 18, 26, மார்ச் 8,9

பரிகாரம் அனுமனை வழிபட்டால் அல்லல் எல்லாம் நீங்கும்.

(தொடரும்)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 409





காவேரி நதிப் பக்கம் போகும் போதெல்லாம் 'திடீரென்று அத்தேவி நீரிலிருந்து எழுந்து எனக்குத் தரிசனம் தரமாட்டாளா? என்ற ஆசையுடன் அங்கு மிங்கும் பார்ப்பேன். நாளாக ஆக, அவள் ஒரு மானிட ஸ்திரீயாகவே இருக்கலாம் என்ற எண்ணம் வலுப்பட்டது. ஆகையால் எந்தத் திருவிழாவுக்குப் போனாலும் அங்கே கூடியுள்ள மூதாட்டிகளின் முகங்களையெல்லாம் நான் ஆர்வத்தோடு உற்றுப் பார்ப்பது வழக்கம். சில காலத்துக்குப் பிறகு அப்படிப் பார்ப்பது அவ்வளவு நல்ல வழக்கமன்று என்பதை உணர்ந்தேன். வருஷம் ஆக ஆக மறுபடியும் அந்தத் தெய்வ முகத்தைத் தரிசிக்கலாம் என்ற ஆசையை இழந்து விட்டேன்.

"சுமார் ஒரு வருடத்துக்கு முன்னால் நமது தென்திசைப் படைகளின் மாதண்ட நாயகனாகி நான் இங்கு வந்து சேர்ந்தேன். அதற்கு முன்பே சேனாபதி பூதிவிக்கிரம கேசரி இலங்கையில் பல பகுதிகளைப் பிடித்திருந்தார். இந்த அநுராதபுரம் பல தடவை கைமாறி, அப்போது மறுபடியும் மகிந்தன் படைகளின் வசத்தில் இருந்தது. இந்நகரை நம் வீரர்கள் முற்றுகையிட்டிருந்தார்கள். முற்றுகை நடந்துகொண்டிருந்த சமயத்தில் நான் இலங்கையின் பல பகுதிகளையும் பார்த்துத் தெரிந்து கொள்ள விரும்பினேன். பொறுக்கி எடுத்த ஆயிரம் வீரர்களை என்னுடன் சேனாபதி அனுப்பி வைத்தார். நம் சைன்யத்தின் வசப்பட்டிருந்த எல்லாப் பகுதிகளுக்கும் காடு மேடு, மலை, நதி ஒன்றும் விடாமல் போய், அந்தந்தப் பிரதேசங்களின் இயல்பை நன்கு தெரிந்து கொண்டு வந்தேன். இந்த இலங்கைத் தீவையொட்டிக் கடலில் பல சிறிய தீவுகள் உண்டு என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும். அந்தத் தீவுகளுக்கும் போய்ப் பார்த்து வந்தேன். இப்படிச் சுற்றி வருகையில் ஒரு சமயம் இந்த நகரத்துக்கு வடக்கே சில காத தூரத்தில் காட்டின் மத்தியில் தாவடி போட்டுக் கொண்டு தங்கியிருந்தோம். நாங்கள் தங்கியிருந்த இடத்தின் பக்கத்தில் 'யானை இறவு'த் துறை இருந்தது. அங்கே இலங்கைக்குக் கிழக்கேயுள்ள கடலும் மேற்கேயுள்ள கடலும் மிக நெருங்கி வந்து ஒரு குறுகிய கால்வாயின் மூலம் ஒன்று சேருகின்றன. அந்தத் துறையின் வழியாகச் சில சமயம் யானைக் கூட்டங்கள் இலங்கையின் வடபகுதிக்குச் செல்லுவது வழக்கமாம். ஆகையால் அந்த இடத்துக்கு 'யானை இறவு' என்று பெயர் வந்ததாகச் சொல்லுகிறார்கள். நாங்கள் அங்கே தங்கியிருந்த சமயத்தில் ஒரு விசித்திரமான சம்பவம் நிகழ்ந்தது. இரவு நேரங்களில் தாவடிக்குச் சமீபத்தில் ஒரு புலம்பல் குரல் கேட்டது. அது மனிதக் குரலா, பட்சியின் குரலா, விலங்கின் குரலா என்று முதலில் தெரியவில்லை, கேட்பவர்கள் ரோமம் சிலிர்க்கும் படியான சோகம் அதில் தொனித்தது. முதலில், தாவடியின் ஓரத்தில் இருந்த வீரர்கள் காதில் விழுந்தது. அதை அவர்கள் பொருட்படுத்தாமல் இருந்தார்கள். பிறகு, பாசறையைச் சுற்றிலும் பல இடங்களிலும் கேட்டது. என்னிடத்திலும் சிலர் வந்து சொன்னார்கள். நான் அதை இலட்சியம் செய்யவில்லை. 'பேய் பிசாசு என்று பயப்படுகிறீர்களா? அப்படியானால் ஊருக்குத் திரும்பிப் போய் அம்மா மடியில் பயமின்றிப் படுத்துத் தூங்குங்கள்!' என்றேன்.

இதனால் அவர்களுக்கு ரோஷம் வந்து விட்டது. அப்படி ஓலமிடுகிற குரல் மனிதக் குரலா, விலங்கின் குரலா அல்லது பிசாசின் குரலா என்று தெரிந்து கொள்ளத் தீர்மானித்தார்கள். ஓலம் வந்த இடத்தை நோக்கி ஓடிப் போய் பார்த்தார்கள். அவர்கள் அருகில் நெருங்கியதும் அந்தக் குரலுக்குரிய உருவம் ஓடத் தொடங்கியது. அது ஒரு பெண்ணின் உருவம் போலத் தோன்றியது. ஆனால் அந்த உருவத்தை இவர்களால் பிடிக்க முடியவில்லை. அதற்குப் பிறகும் அந்த ஓலம் நிற்காமல் அடிக்கடி கேட்டுக் கொண்டிருந்தது.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## மணி அடித்த குரங்குகள்



ஒரு காட்டு பகுதிக்கு பக்கத்துல இருக்குற ஒரு கிராமத்துல ஒரு திருடன் இருந்தான்.

அந்த திருடன் எதை பார்த்தாலும் திருடிட்டு போய் காட்டுக்கு அடுத்து இருக்குற ஊருல வித்து வாழ்க்கை நடத்திக்கிட்டு இருந்தான்.

ஒரு நாள் அவன் கோவில் பக்கம் போனான். அப்ப மணி அடிக்கிற சத்தம் கேட்டுச்சு. உடனே கோவிலுக்கு போனான் அந்த திருடன்.

அங்க ஒரு பெரிய மணி தொங்கிகிட்டு இருக்குறத பார்த்தான்.

அடடா இந்த மணிய திருடி வித்தா ஒரு வாரம் நாம திருட போக வேணாம்னு நினைச்ச அந்த திருடன் அந்த மணிய திருடிட்டு காட்டு வழியா அடுத்த ஊருக்கு நடந்து போக ஆரம்பிச்சான்.

அவன் நடக்க நடக்க அந்த மணி [illegible] டாங்குனு சத்தம் கொடுக்க ஆரம்பிச்சுச்சு. அந்த மணியோட சத்தம் காட்டுக்குள்ள ஒரு தூங்கிட்டிரு இருந்த ஒரு புலியோட தூக்கத்த கெடுத்துச்சு.

யாரு மணி அடிச்சு தன்னை எழுப்பிவிட்டானு ரொம்ப கோபத்தோட பார்த்துச்சு அந்த புலி.

புலிய பார்த்ததும் அந்த திருடன் ரொம்ப பயந்து போனான். அந்த புலி அவன ஒரு அடி அடிச்சது.

உடனே அந்த திருடனுக்கு ஒரே ரத்தமா வந்துச்சு. இந்த மணிய தூக்கிகிட்டு இந்த புலிகிட்ட இருந்து தப்பிக்க முடியாதுனு அந்த மணிய அங்கயே போட்டுட்டு வேகமா ஓட ஆரம்பிச்சான் திருடன்.

அந்த புலியும் அவன தொரத்திக்கிட்டே போக ஆரம்பிச்சுச்சு. அப்பதான் ஒரு குரங்கு கூட்டம் அந்த பக்கமா வந்துச்சுங்க.

அந்த குரங்கு கூட்டம் அந்த மணிய பார்த்ததும் அத எடுத்து அடிச்சி சத்தம் வர வச்சு பாத்துச்சுங்க.

அந்த மணி எழுப்பிய டிங் டாங் சத்தம் கேட்டதும் அந்த குரங்குகளுக்கு ரொம்ப பிடிச்சி போச்சு.

அதனால அதுங்க எல்லாம் ஒண்ணா சேர்ந்து அந்த மணிய எடுத்துக்கிட்டு தாங்க வாழுற பெரிய மரத்துக்கு போச்சுங்க.

அந்த மரம் ஊருக்கு பக்கத்துல இருக்குற காட்டு பகுதியில இருந்ததால, ஒவ்வொரு தடவ அந்த மணிய அடிக்கும் போதும் அது ஊர்காரங்களுக்கு கேட்டுச்சு.

திடீர்னு காட்டுக்குள்ள இருந்து மணி சத்தம் தொடர்ந்து கேட்டதால ஊர் மக்கள் எல்லாம் ரொம்ப பயந்து போனாங்க.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்கும் எண்ணம் எதுவும் எம்மிடம் இல்லை

## எதிர்க்கட்சிகளுக்கு ரணில் பதிலடி

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சியை ஒழிக்கும் யோசனை ஊடாக ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்க சூழ்ச்சி செய்து வருவதாக வெளியாகியுள்ள செய்தி எதிர்க்கட்சிகள் உருவாக்கிய கற்பனைக் கதை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பில் ஜனாதிபதி இதனைக் கூறியுள்ளார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதற்கு குறுகிய வழிகள் எதுவுமில்லை. அது நீண்ட செயற்பாடு எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் உரிய நேரத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ள ஜனாதிபதி, அந்த தேர்தலை நடத்துவதற்கு தேவையான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

எது எப்படி இருந்த போதிலும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சியை முறையை ஒழிக்கும் யோசனையின் போர்வையில், ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்கும் சூழ்ச்சிகள் நடந்து வருவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்திருந்தார்.

இலங்கையில் நிறுவனம் ஒன்று நடத்திய கருத்துக்கணிப்பில் ஐக்கிய தேசியக்கட்சி மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆகிய கட்சிகளுக்கு மக்கள் மத்தியில் ஆதரவான நிலைப்பாடுகள் இல்லை எனவும் தேசிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய கட்சிகளுக்கே மக்கள் மத்தியில் செல்வாக்கு இருப்பதாகவும் தெரியவந்துள்ளதாக செய்திகள் வெளியாகி இருந்தன.

இதன் காரணமாக அரசாங்கம், ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்க முயற்சித்து வருவதாக எதிர்க்கட்சிகள் கூறி வருகின்றன.

ஆனால், அரசியலமைப்புச்சட்டத்திற்கு அமைய ஜனாதிபதித் தேர்தல் இந்த ஆண்டு கட்டாயம் நடத்தப்பட வேண்டும் என முன்னாள் தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

எந்த காரணத்தை கொண்டும் ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்க முடியாது என்பது அவரது கருத்தாக உள்ளது.

இந்த நிலையில், ஜனாதிபதித் தேர்தல் இந்த ஆண்டு நடத்தப்படும் என்பதுடன் அடுத்தாண்டு பொதுத் தேர்தல் மற்றும் மாகாண சபை தேர்தல் என்பன நடத்தப்படவுள்ளதாகவும் ஜனாதிபதி கூறியுள்ளார். (ந-7)

### கச்சதீவு பெருநாளுக்கு ரூ.90 இலட்சம் தேவை

# கிடைத்ததோ ரூ.10 இலட்சம்

### யாழ்.மாவட்ட அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கச்சதீவு புனித அந்தோனியார் தேவாலய திருவிழாவுக்கு உத்தேச செலவீனமாக 90 இலட்சம் ரூபாய் மதிப்பிடப்பட்டுள்ள நிலையில், 10 இலட்ச ரூபாயே திணைக்களங்கள் ஊடாக பெற்றுக் கொண்டுள்ளதாக யாழ். மாவட்ட செயலர் அ. சிவபாலசுந்தரன் தெரிவித்துள்ளார்.

இம்முறை பயணிகளிடம் ஒருவழிப் படகுப் பயணக்கட்டணமாக 1,500 ரூபாய் பணம் அறவிடப் படவுள்ளதாகவும் யாத்திரிகர்கள் இம்முறை தமக்குத் தேவையான உணவை தாமே கொண்டுவர வேண்டும் என்பதாகவும் பல்வேறு அறிவுறுத்தல்கள் யாழ். மாவட்ட செயலகத்தால் விடுக்கப் பட்டுள்ளமை தொடர்பில் தெரிவிக்கும்போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

மேலும் கருத்து தெரிவித்த அவர், இந்திய துணைத்தூதரகம் நிதி பங்களிப்புக்களை வழங்கி வந்த நிலையில், அதைப் பற்றி இம்முறை தூதரகம் இதுவரையில் எந்தவொரு தகவலையும் எமக்கு அளிக்கவில்லை.

கச்சதீவு திருவிழா எதிர்வரும் 24ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், இலங்கையில் இருந்து 4 ஆயிரம் பக்தர்களும் இந்தியாவில் இருந்து 4 ஆயிரம் பக்தர்களும் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது என்றார்.

இதேவேளை, தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்வதனை கண்டித்தும், அத்துமீறி நுழைந்து மீன்பிடித்த குற்றச்சாட்டில் இலங்கை சிறைகளில் உள்ள தமிழக மீனவர்களை விடுவிக்க கோரியும், இராமேஸ்வர மீனவர்கள் கச்சதீவு திருவிழாவை புறக்கணிக்கவுள்ளதாகத் தீர்மானம் எடுத்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-7)

## ஐ.நா உணவு விவசாய அமைப்பின் மாநாடு இன்று கொழும்பில் ஆரம்பம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் 37 ஆவது ஆசிய பசுபிக் மாநாடானது கொழும்பில் இன்று ஆரம்பமாகி தொடர்ந்து மூன்று நாட்கள் இடம்பெறும்.

மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் உள்ள 35 நாடுகளைச் சேர்ந்த விவசாய அமைச்சர்கள், துணை அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் இலங்கையை வந்தடைந்தனர்.

இம் மாநாட்டையொட்டி, ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் பணிப்பாளர் நாயகமும் இன்று வருகை தரவுள்ளார். (ந-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை **காலை 09:30 மணியிலிருந்து மாலை 5:00 மணி வரை கிளிநொச்சி பிரதேசத்தில்** கிராஞ்சி, சிவபுரம், கிராஞ்சி [illegible] சபை, பாலாவி, பொன்னாவெளி, வலைப்பாடு, வேரவில் ஆகிய இடங்களில் மின்சாரம் தடைப்படும்.

## வாகன விபத்தில் பத்துபேர் காயம்

சிவனொளிபாத மலை யாத்திரைக்கு பயணித்த வானும் பேருந்தும் நேருக்கு நேர் மோதியதில் 10 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் பிற்பகல் ஹட்டன் - கொழும்பு பிரதான வீதியில் கினிகத்தேனை - மில்லகஹமுல பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

கம்பஹா பகுதியிலிருந்து யாத்திரிகர்கள் குழுவை ஏற்றிச் சென்ற வான் ஒன்றும் மாத்தறை பகுதியிலிருந்து யாத்திரிகர்கள் குழுவை ஏற்றிச் சென்ற பேருந்து ஒன்றுமே இவ்விபத்தில் சிக்கியுள்ளன.

விபத்தில் வேனும் பேருந்தும் பலத்த சேதமடைந்துள்ளதுடன், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கினிகத்தேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-7)

நல்ல செயல் எப்போதும் உலகில் உலகில் தனக்கு ஓர் இடம் உண்டாக்கிக்கொள்ளும்.
~ எமர்சன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழ் விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை யாரறிவார்!

வடக்கு கிழக்குத் தமிழர் தாயகம் விவசாய பூமி. ஒரு காலத்தில் இலங்கையின் மொத்த விவசாய உற்பத்தியில் தமிழர் பிரதேசம் காத்திரமான வகிபங்கைக் கொண்டிருந்தது.

ஆனால் தமிழர் மீதான இனப் போரை ஆட்சியாளர்கள் என்று ஆரம்பித்தார்களோ அன்றிலிருந்து தமிழ் மக்களின் விவசாயம் வீழ்ச்சி நிலையை நோக்கிச் செல்லலாயிற்று.

ஆம், யுத்த காலத்தில் தமிழ் மக்களின் விவசாய நிலங்கள் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டன.

அதிலும் குறிப்பாக வலி.வடக்கு மற்றும் வலி.கிழக்கில் உள்ள அருமந்த விவசாய மண் படையினரால் ஆக்கிரமிக்கப்பட, அங்கிருந்த விவசாயிகள் தங்களின் பயிர்செய் நிலங்களை விட்டு வெளியேறும் பரிதாப நிலைக்கு ஆளாகினர்.

இந்த மோசமான நிலைமை தமிழர் பிரதேசம் முழுமையிலும் நடந்தது.

இதுதவிர, யுத்த காலத்தில் விவசாய உள்ளீடுகள், எரிபொருள், அசேதனப் பசளை என்பவற்றுக்கு அரசு தடை விதித்ததன் காரணமாகத் தமிழ் விவசாயிகள் மிகுந்த கஷ்டங்களை அனுபவித்தனர்.

யுத்தம் முடிவுற்ற பின்னரும் கூட, தமிழ் மக்களுக்குச் சொந்தமான விவசாய நிலங்களை படையினர் ஆக்கிரமித்துள்ளனர்.

இதுதவிர, தமிழர் பகுதிகளில் சட்டவிரோதமாகச் சிங்களவர்களைக் குடியேற்றி தமிழர்களுக்குச் சொந்தமான விவசாய நிலங்களை, மேய்ச்சல் தரைகளை ஆக்கிரமித்து தமிழ் விவசாயிகளை இந்த நாடு நிர்க்கதி ஆக்கியுள்ளது.

இப்போது கூட, விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களுக்கு உரிய விலை கிடைக்காமையால் எங்கள் விவசாயிகள் பொருளாதார மந்தத்துக்கு ஆளாகியுள்ளனர்.

உண்மை. இது நெல் அறுவடைக் காலம். அறுவடை செய்த நெல்லைக் களஞ்சியப் படுத்தி வைப்பதற்குத் தமிழர் பிரதேசத்தில் எந்த வசதி வாய்ப்புகளும் இல்லை.

நெல்லை காய வைப்பதாக இருந்தால் கூட, அதனை வீதியில் காய வைக்கின்ற பரிதாபம்.

நெல்லை வீதியில் காய வைப்பது. பின்னர் இரவு வேளையில் அவற்றைக் குவித்து விடுவது என்ற செயற்பாடுகளால் ஏற்பட்ட விபத்துக்களில் உயிரிழந்தவர்கள் பலர். அண்மையில் கூட, வீதியில் நெல்லைப் பரவிக் கொண்டிருந்த ஒரு விவசாயி மீது மோட்டார் சைக்கிள் மோதியதில் அந்த விவசாயி உயிரிழந்து போனார்.

இதற்கு மேலாக, உரிய காலத்தில் உத்தரவாத விலைக்கு நெல்லைக் கொள்வனவு செய்யும் ஏற்பாடுகள் எதுவும் எம்மத்தியில் இல்லாத காரணத்தால், நெல் வியாபாரிகள் அறாவிலைக்கு நெல்லைக் கொள்வனவு செய்கின்றனர்.

இவ்வாறாக தமிழ் விவசாயிகள் பல்வேறு பிரச்சினைகள், போராட்டங்களுடன் விவசாயத்தில் ஈடுபடுகின்றனராயினும் அதுபற்றிக் கவனம் செலுத்த இங்கு யாரும் இல்லை.

இந்நிலையில் இன்று கொழும்பில் ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் ஆசிய பசுபிக் மாநாடு நடைபெறுகிறது.

இதில் 35 நாடுகளின் விவசாய அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த மாநாட்டில் எங்கள் தமிழ் விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் முன்வைக்கப்படுமா? அதற்கான ஏற்பாடு செய்யப்படுமா? என்பதுகூட கேள்விக்குறியே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத் தாய்மொழிகள் தினம் பெப்ரவரி 21 ஆம் திகதி



கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

05

பல அரசியல்வாதிகளும் மக்களுக்கு நெருக்கமாகத் தங்களைக் காட்டிக் கொள்ளும் நோக்கில் தங்கள் மேடைப் பேச்சுக்களிலும் கொடுந்தமிழைப் பயன்படுத்தி வருகின்றனர்.

கொடுந்தமிழானது பிறமொழி கலப்பினால் களங்கம் கண்ட தமிங்கிலம் போன்ற தமிழ் வழக்குகளை சுட்டப் பயன்படுத்தப்படுவதில்லை.

### தமிங்கிலிசு

தமிழ் மொழியின் பேச்சிலோ, எழுத்திலோ ஆங்கில சொற்களின் பயன்பாடும் ஆங்கில இலக்கணக் கட்டமைப்பும் அதிகம் காணப்படும் பொழுது அந்த பேச்சையோ, எழுத்தையோ தமிங்கிலம் எனலாம். இதனை தமிங்கிலிசு, தங்கிலிசு என்றும் சிலர் குறிப்பிடுவதுண்டு.

தமிங்கிலம் ஆங்கிலத்தின் வட்டார மொழி வழக்கு அல்ல. இது தமிழ்மொழியின் திரிபே ஆகும். தமிங்கிலத்தை தமிழில் அதிக சமஸ்கிருதச் சொற்களின் பயன்பாட்டால் தோன்றிய மணிப்பிரவாள நடையோடு ஒப்பிடுவதுத்கும். சில தமிழர்கள் தமிழரோடு ஆங்கிலத்தில் உரையாடும் பொழுது தமிழ்ச் சொற்களை இடையிடையே பயன்படுத்துவதும் உண்டு.

### தனித்தமிழ்

பிறமொழிச் சொற்களின் கலப்படமின்றி மரபுசார் இலக்கண நெறிகளுக்கு இறுக்கமாக ஒழுங்கி எழுதப்படும், பேசப்படும் தமிழ்மொழியை தனித்தமிழ் எனலாம். தனித்தமிழ்தமிழில் மிகுதியாகி வரும் ஆங்கிலச் சொற்களையும் நீண்டகாலமாகக் கலந்து நிற்கும் வடமொழிச்சொற்களையும் தவிர்த்து எழுதுவதை இலக்காகக் கொண்டது. தமிழ் வேர்ச் சொற்களில் இருந்து ஆக்கப்படும் சொற்களே தமிழ்மொழிக்கு வளம் சேர்க்கும் என்ற கருத்துடையது.

இது ஒரு கருத்தியல் இலக்கே. தமிங்கிலம், மணிப்பிரவாளம் ( மணிப்பிரவாளம் என்னும் சொல், தென்னிந்தியாவில் வடமொழியும் திராவிட மொழியொன்றும் கலந்து எழுதப்பட்ட ஒரு இலக்கிய நடையைக் குறிக்கும்.) போன்றவற்றின் எதிர் நிலை எனலாம். இது அவற்றின் ஆதிக்கத்தால் தோன்றிய எதிர்நிலை எனலாம்.

### இலங்கைத் தமிழ்ப் பேச்சு வழக்கு

இலங்கையில், அதிக மக்கள் தொகையைக் கொண்ட யாழ்ப்பாணப் பேச்சுவழக்கையே பெரும்பாலான வெளியார் இலங்கைத் தமிழ்ப்பேச்சு வழக்காக இனங்கண்டு கொள்கின்றனர். இருப்பினும் இலங்கையின் கிழக்குப் பகுதியில் குறிப்பாக மட்டக்களப்புப் பேச்சுத் தமிழ் யாழ்ப்பாணப் பேச்சு வழக்கிலிருந்து வேறுபட்டு வடமொழிக் கலப்புக் குறைந்து மிகப் பழைய விளிப்புப் பெயர்களையும் அசைச் சொற்களையும் கொண்டு காணப்படுகிறது. இது பற்றி பின்னர் பார்ப்போம்.

### வட்டாரக்கிளை மொழிகள்

எத்னொலோக் என்ற மொழிகள் பற்றிய பதிப்பு நிறுவனம், தமிழில் 22 வட்டார வழக்குகள் இருப்பதாக தெரிவிக்கிறது.

தமிழில் வட்டாரமொழி வழக்குகள், பெரும்பாலும் சொற்களை ஒலிப்பதில் (சொல்வதில்) மாறுபடுகின்றன. இவை பல்வேறு பழைய செந்தமிழ்ச் சொற்களினின்றும் பிறந்தவையாகும். எடுத்துக் காட்டாக, “இங்கே” என்ற சொல் கன்னியாகுமரி மாவட்டத்தில் பரவலாக “இஞ்ச” என்றும் தஞ்சாவூர்பகுதிகளில் “இங்க” என்றும் யாழ்ப்பாணப் பகுதிகளில் “இங்கை” என்றும் வழங்கப்படுகின்றது.

ஆயினும் திருநெல்வேலி பகுதிகளில் “இங்கனெ” என்றும் இராமநாதபுரம் பகுதிகளில் “இங்குட்டு” / “இங்கிட்டு” என்றும் வழங்கும் சொற்கள் “இங்கே” என்ற சொல்லில் கிளைத்தவை அல்லாமல் வேறு செந்தமிழ்ச் சொற்களினின்றும் பிறந்தவையாகும்.

இங்கனெ என்பது “இங்கணே” ஃஇங்கனே” என்பதன் மாற்றமும் “இங்குட்டு”/ “இங்கிட்டு” என்பது “இங்கட்டு” என்னும் செம்மொழிச் சொல்லின் மாற்றமும் ஆகும். “கண்” என்னும் சொல்லின் பொருள் இடம் என்பது ஆகும். கட்டு என்னும் சொல்லும் கண் என்பதோடு து-விகுதி சேர்ந்து வழங்கும் சொல்லாகும்.

பெரும்பாலான வட்டார மொழி வழக்குகளின் சொல் அகராதியில் குறிப்பிடத்தக்க மாற்றம் இல்லை என்றாலும் சில வழக்குகள் பெரிதும் மாறுபடுகின்றன. இலங்கையில் பேசப்படும் தமிழின் சில சொற்கள், தமிழகத்தில் அன்றாட வழக்கில் பயன்படுத்தப்படுவதில்லை.

தமிழ்மொழி வழக்குகள் வட்டார அடிப்படையில் மட்டுமல்லாது சாதி அடிப்படையிலும் வேறுபடும். பல சாதிகளுக்கெனத் தனியான பேச்சு வழக்குகள் இருந்து வந்தன. தற்போது சாதி மறுப்பு இயக்கங்களின் விளைவாக இவ்வேறுபாடுகள் மறைந்து வந்தாலும் ஒருவரின் பேச்சுவழக்கை வைத்து அவரின் சாதியைச் சில வேளைகளில் கணிக்க முடிகிறது.

புவியியல் தொடர்பான வட்டார வழக்குகள் ஒருபுறமிருக்க, சமுதாய அடைப்படையிலும் பல்வேறு மட்டங்களில் தமிழ்மொழிப் பயன்பாட்டில் வேறுபாடுகளைக் கவனிக்கலாம். புதிய வழக்காக, தொலைக்காட்சி முதலான தொடர்புச்சாதனங்களும் இன்று பெருமளவுக்கு ஆங்கிலம் கலந்த தமிழைத் தமிழ் மக்கள் மத்தியில் புழக்கத்துக்கு விட்டுள்ளன. மேநாட்டுக் கல்வி மற்றும் அறிவியல் வளர்ச்சி தொடர்பில் புதிய சொல்லாக்கம், கலைச்சொல்லாக்கம் முதலிய அம்சங்களில் ஒருங்கிணைவு அற்ற முயற்சிகள் வேறுபட்ட மொழி வழக்குகளை உருவாக்கியுள்ளன.

முக்கியமாக, இலக்கியம் மற்றும் அது போன்ற பண்பாட்டு மற்றும் மரபு வழிப் பயன்பாடுகளுக்கு அப்பால், கல்வி, அறிவியல், நிருவாகம் மற்றும் இன்னோரன்ன நவீனத் துறைகளிலும் தமிழைப் பயன்படுத்தி வரும் தமிழ் நாடு, இலங்கை போன்ற நாடுகளில் உருவாக்கப்படும் ஆயிரக்கணக்கான தமிழ்ச்சொற்கள், ஒரு பகுதியினர் பயன்படுத்தும் தமிழை இன்னொரு பகுதித் தமிழர் புரிந்து கொள்ள முடியாத அளவுக்கு வேறுபாடுள்ள மொழி வழக்குகள் உருவாகக் காரணமாக உள்ளன.

### தற்காலத்தில் கிளை மொழிகள்

கிளைமொழிகள் பற்றிய சிந்தனை சங்ககாலத்திலிருந்தே தமிழில் இருந்து வந்துள்ளது. இலக்கிய, இலக்கணங்களும் உரைகளும் இதற்குச் சான்றாக அமைகின்றன. அண்மைக் காலங்களில் நிகழ்ந்த கிளை மொழி ஆய்வுகள் தமிழில் ஐந்து கிளைமொழிகள் நிலவுவதை எடுத்துக் காட்டுகின்றன. இவற்றைத் தெளிவாக வரையறுத்து சான்றுகளுடன் மொழியியல் அறிஞர்கள் விளக்கியுள்ளனர். (சீனிவாசசர்மா 1986) அவை வடக்குக் கிளைமொழி, தெற்குக் கிளைமொழி, மத்திய கிளைமொழி, மேற்குக் கிளைமொழி, இலங்கைக்கிளைமொழி ஒவ்வொரு கிளைமொழியிலும் ஒலியியல், சொல்லியல் சார்ந்த தனித்தன்மைகள் காணப்படுகின்றன.

### வடக்குக்கிளைமொழி

சென்னை, செங்கை, வேலூர், காஞ்சிபுரம் முதலிய மாவட்டங்களில் வழங்கும் தமிழ் வடக்குக் கிளை மொழி எனப்படுகிறது. பிறமொழியாளர்களின்ஆட்சி காரணமாக இக்கிளைமொழியில் உருது,தெலுங்கு சொற்களும் இடம்பெற்றுள்ளன. ஒலி நிலையில் ழுகரம், யகரமாகவும் ஸகரமாகவும் வழங்குவதை இக் கிளைமொழியில் காணலாம் உதாரணமாக ஒலி வடிவில் கழுதை என்பது கய்தெ எனப்படுகிறது.

### தெற்குக் கிளைமொழி

மதுரை, இராமநாதபுரம், நெல்லை பகுதிகளில் இக்கிளைமொழியில் றகரமும் மொழி முதல்சகரமும் காணப்படுகின்றன. நெல்லை, மதுரை பகுதிகளில் அவன் சொல்லுதான் (சொல்கிறான்), கேக்குதான் (கேட்கிறான்) போன்ற வழக்குகள் இடம்பெறுகின்றன. கன்னியாகுமரி மாவட்ட வழக்கில் பட்டி (நாய்), அரி (அரிசி) முதலிய வழக்குகள் இடம்பெற்றுள்ளன.

### மத்திய கிளைமொழி

திருச்சி, தஞ்சை, புதுக்கோட்டை பகுதிகளில் வழக்கில் உள்ள மத்திய கிளைமொழியில் லகர, எகர, ழுகர வேறுபாடு தெளிவாகவும் றகர, ரகர வேறுபாடு குறைவாகவும் உள்ளது.

### மேற்குக்கிளைமொழி

இக்கிளைமொழி சேலம், தர்மபுரி, கோவை முதலிய பகுதிகளில் வழங்குகிறது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெரிவுகளை...

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் தெரிவு உள்ளிட்ட தெரிவுகளுக்கு எதிராகவும், இன்று 19ஆம் திகதி நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த 17ஆவது தேசிய மாநாட்டுக்கு எதிராகவும் திருகோணமலை, யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை அடுத்து இடைக்காலத் தடை கட்டாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து அடுத்த கட்டமாக எவ்விதமான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்பது தொடர்பில் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்ட போதே சிறீதரன் எம்.பி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"75 வருட கால அரசியல் பாரம்பரியத்தைக் கொண்ட இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு எதிராக தற்போது வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளன.

ஆகவே, தொடுக்கப்பட்ட வழக்குகள் தொடர்பில் நீதிமன்றத்தின் ஊடாக கட்சி அதனை முறையாகக் கையாளுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. அதேநேரம், கட்சியின் நிர்வாகம் தொடர்பில் புதிய தெரிவுகள் இடம்பெற்றுள்ளமையானது யாப்பு விதிகளுக்கு முரணானது என்றும் கூறப்பட்டுள்ளது.

என்னைப் பொறுத்தவரையில், எனது தலைமைத் தெரிவு உட்பட கட்சியின் அனைத்துப் பதவி நிலைகளுக்கான புதிய தெரிவுகளையும் மீளவும் செய்வதற்கு நான் தயாராகவே உள்ளேன். விசேடமாக கட்சியின் மூலக் கிளை தெரிவுகளில் இருந்து அனைத்தும் மீள நடைபெறுவதாக இருந்தால் கூட அதனை ஏற்றுக்கொள்வதில் எனக்கு எவ்விதமான பிரச்சினைகளும் இல்லை.

மேலும், தற்போது புதிய தெரிவுகள் சம்பந்தமான விடயங்கள் நீதிமன்றத்தின் தீர்ப்பிலேயே தங்கியுள்ளன. ஆகவே, நீதிமன்றத்தின் தீர்மானத்தைப் பின்பற்றுவதற்கும் நான் தயாராக உள்ளேன்.

விசேடமாக, நீதிமன்றம் புதிய நிர்வாகத் தெரிவுகள் தவறாக இருக்கின்றன என்று தனது தீர்ப்பில் சுட்டிக்காட்டுமாக இருந்தால் நீதிமன்றத்தின் மேற்பார்வையுடன் அதனை மீளச் செய்வதில் எமக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை.

எவ்வாறாயினும் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குள்ளும், எதிராகவும் பல சூழ்ச்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. அந்தச் சூழ்ச்சிகள் பற்றி புரிதல்களும் எமக்குத் தெளிவாக உள்ளன.

எனவே, அனைத்து தடைகளையும் முறையாகக் கையாண்டு அவற்றைக் கடந்து எமது பாரம்பரிய அரசியல் கட்சியின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் என்றார். (ந-7)

## யாழ்., கிளி...

ஓய்வுபெற்ற நிலையில் கிளிநொச்சி மாவட்டத்துக்கான அரச அதிபர் பதவி வெற்றிடமாகவுள்ளது.

இதேவேளை யாழ்ப்பாணம் மாவட்ட அரச அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் எதிர்வரும் மார்ச் மாதம் 8ஆம் திகதி ஓய்வு பெற்றுச் செல்லவுள்ளார்.

மேற்படி இரண்டு அரச அதிபர்களுக்கும் மேலும் ஒரு வருடம் சேவை நீடிப்பு வழங்க இன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெறும் அமைச்சரவைக்கு உரிய பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கான அனுமதியை அமைச்சரவை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ந-7)

## முதலாம்...

கற்றல் செயற்பாடுகள் கடந்த 16ஆம் திகதியுடன் நிறைவுக்கு வந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## இந்தியத்...

செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். அவர்களை விடுவிக்க வேண்டும் எனக் கோரி தமிழகத்தின் இராமேஸ்வரத்தில் போராட்டம் நடத்தப்படுகிறது.

எங்கள் வயிற்றில் அடித்து வயிற்றுப் பிழைப்புக்காக வந்தோம் என இந்திய மீனவர்கள் கூறுவது தவறு. இந்திய கடற்படை கடல் எல்லையில் நின்று அத்துமீறுபவர்களைத் தடுத்தால் இந்தப் பிரச்சினை ஏற்படாது.

தமிழ்நாட்டு மீனவர்கள் அயல் மாநிலங்களுக்குச் சென்றால் இந்திய சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவார்கள் என்ற அ[illegible] உறவு எனக்[illegible] வந்து தொழில் செய்கிறார்கள்.

சில நாட்களாக மயிலிட்டிப் பகுதியில் தொடர்ச்சியாக இந்திய மீனவர்களின் அத்துமீறல் அதிகரித்துள்ளது.

ஆகவே நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத்தூதரகத்தை முற்றுகையிட்டுப் போராடவுள்ளோம் என்று தெரிவித்தனர். (ந-7,33)

## பாராளு...

பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதனூடாக முதலில் பொதுத் தேர்தலை நடத்த ஜனாதிபதி திட்டமிட்டிருப்பதாகவும் சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் அரச புலனாய்வுத்துறை வழங்கிய தரவுகளின் அடிப்படையிலேயே ஜனாதிபதி இம்முடிவை எடுத்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இதேவேளை நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையினை ஒழிக்க வேண்டும் என்பதில் முன்னாள் ஜனாதிபதிகள் உட்பட பல தரப்பினரும் தீவிரமாக உள்ளனர்.

எனவே பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலை நடத்தும்போது, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதற்கான பிரசாரத்தை மக்கள் மத்தியில் மேற்கொண்டு அதற்கான ஆதரவைப் பொதுமக்களிடம் இருந்து பெற்றுக் கொள்வதற்கான வியூகமாகவும் பொதுத் தேர்தல் அமையும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கருதுவதாகவும் அறிய முடிகிறது. (ந-7)

## அரச...

பிரதமர், அரச வங்கிகள் தேசிய வளமாகப் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாங்கள் இருக்கிறோம். அதில் எந்தப் பிரச்சினையும் இல்லை.

ஆனால் சில மாற்றங்களைச் செய்வது குறித்துக் கலந்துரையாட வேண்டும். இல்லையென்றால் நாம் ஒரு தலைப்பட்சமாக [illegible] ருக்கும்.

தற்போது பொருளாதார நெருக்கடியில் இருந்து நாம் ஓரளவு மீண்டிருப்பதால் முக்கியமான வங்கிகளை எப்படியேனும் பாதுகாக்க வேண்டும். அதை எப்படி செய்வது என்பது இன்னும் விரிவாகக் கலந்துரையாடப்பட வேண்டும். பெரும் வர்த்தகர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கடன்தான் பாரதூரமான சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது.

வங்கிகள் அரசியல்வாதிகளுக்குக் கடன் கொடுத்ததால்தான் வங்குரோத்து நிலையை அடைந்துள்ளது. அதை தனியார் நிறுவனத்திற்கு விற்பதுதான் ஒரே வழி என்பது புனையப்பட்ட கதைகள். இதுபோன்ற கதைகளில் நாம் ஏமாறாமல் இருக்க வேண்டும் என்றார். (ந-7)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

லக்ஸ் 7 VIP
திகதி 2024.02.18
சீட்டிழுப்பு இலக்கம் 0220
L 9 2 0 8 4 9 L
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2024.02.18
சீட்டிழுப்பு இலக்கம் - 1424
W 21 53 68 72 W
28454

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3636
சீட்டிழுப்பு திகதி 18.02.2024
U 04 23 38 71
U
99076
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.02.18
சீட்டிழுப்பு இலக்கம் 0703
கடகம் 25 31 34 61 கடகம்
22178 27

மஹஜன சம்பத
திகதி 2024/02/18
சீட்டிழுப்பு இலக்கம் 5394
Y 0 8 1 7 8 5
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 18/02/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1742
Q 16 18 23 26 73
37400

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுபிரி தன சம்பத
திகதி 18.02.2024 வெற்றி வாரம் 102
W 5 9 7 1 5 6
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 29,320,544.00
DLB தொலை பேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2368 வர்ணம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2024.02.18 தினம் ஞாயிற்றுக்கிழமை
23 31 47 58 V
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ 73,358,198.40

சனிதா
திகதி 2024.02.18 வெற்றி வாரம் 4529
22 30 31 52 N
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.50,207,371.60

சசிரி
வெற்றி வாரம் 443
2024.02.18
கபிலம்
22 25 48
06
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,432,640/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4080 வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2024.02.18 தினம் ஞாயிற்றுக்கிழமை
23 24 34 61 மேடம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 6,263,477.60

லக்ன / ஜயா
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
V 29 03 52 57 58
1544 மஞ்சள் 18.02.2024 ஞாயிறு
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 506,854,890.20

அத கோடிபதி ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம்: 2194
வர்ணம்: இளம் பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2024.02.18
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.92,233,452/-
17 39 43 52 L


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (19132)

076 825 7716 (ஆகாஸ்)



## மணப்பெண் தேவை

- நீர்வேலி, இந்து, கௌரவகுலம், 1981, புனர்பூசம், Super market owner, UK Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- புலோலி, இந்து கௌரவகுலம், 1978, பூரம், Salesman, UK மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- சங்கானை, இந்து, கௌரவகுலம், 1985, சித்திரை, Bachelor of Business Management, UK மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- வண்ணார்பண்ணை, இந்து, கௌரவகுலம், 1976, ரேவதி, MBBS Doctor, UK Citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- கரவெட்டி, இந்து, கௌரவகுலம், 1984, அனுசம், Bachelor of computer Application, UK Citizen Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- நல்லூர், இந்து, கௌரவகுலம், 1987, உத்தரம், MBA,UK citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- மானிப்பாய், இந்து, கௌரவகுலம், 1983, கேட்டை, IT Diploma, Manager, UK citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- கரவெட்டி, இந்து, கௌரவகுலம், 1986, திருவோணம்,BA(Hons), cima fully qualified, UK citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- புலோலி, இந்து, கௌரவகுலம், 1981, கார்த்திகை, Masters Degree, UK Citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை.

(19165)

S.Sharma J.P Astrologer
- 077 539 3728
- 077 803 8193


## போதைப்...

வயதுடைய ஒருவரும் தெல்லிப்பளை பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய ஒருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இதில் 30 வயதான நபர் போதைப் பொருள் வாங்க பணம் கொடுக்காததால் உயிரை மாய்த்து கொண்டதாகவும் மற்றைய நபர் ஹெரோயின், ஐஸ் போதைப்பொருட்களை அதிகளவில் உட்கொண்டதால் மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருவரின் சடலங்களும் யாழ். போதனா வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது. உயிரிழந்தவர்களின் மரண விசாரணைகளை திடீர் மரணவிசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ந-7)


V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-8381)



மற்றுமொரு புதிய பஸ் சேவை
ஆரம்பித்துள்ளனர்
Village Hotel Jaffna Express
அச்சுவேலி → புன்னாலைக்கட்டுவன் →
உரும்பிராய் → திருநெல்வேலி →
யாழ்ப்பாணம் → கொழும்பு
கட்டணம் - 2700/=
(19118)
தொடர்புகளுக்கு
077 544 8503



## யாழ். கச்சேரிக்கு அருகில் காணி உடன் விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகில் 3 1/2 பரப்புக் காணி, இரண்டு வெட்டுக் கிணறுகளுடன் உடன் விற்பனைக்கு உண்டு. இந்தக் காணி சுண்டுக்குழி தபால் நிலையத்துக்கு அருகில் - கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ளது.
மொத்தமாக 55 மில்லியன் (5 கோடியே 50 லட்சம்)
(கிழமை நாட்களில் பார்வையிடலாம்)
தொடர்புகளுக்கு :
+447963743585(Whatsapp)
021 222 7141(Srilanka)
E.mail : Jamesraj_uk@yahoo.co.uk
(18948)



அகரம்
உயர்நிலைக் கல்லூரி
AHARAM HIGH STANDARD COLLEGE
காங்கேயன்துறைச்சாலை
மல்லாகம் | கொக்குவில்
புதிய கல்வி ஆண்டு
2024
தமிழ் மொழி மூலம்; English Medium
ஆரம்பம் :
19.02.2024
மாலை-3.00 மணி
(19161)
"அகரம் எம் தேசக் குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்".



அகரம்
உயர்நிலைக் கல்லூரி
AHARAM HIGH STANDARD COLLEGE
காங்கேயன்துறைச்சாலை
மல்லாகம் | கொக்குவில
ACADEMIC YEAR
2024
தமிழ் மொழி மூலம்; English Medium
Class Started on
19.02.2024
Monday @ 03.20 pm
(19161)
"Aharam, The prosperous future of our nation's children".


## வாழ்த்தி வரவேற்கிறோம்



யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் நிரந்தர அதிபராகக் கல்வி அமைச்சினால்
நியமனம் வழங்கப்பட்டிருக்கும்

### திருமதி கிறிஸ்ரி சுகந்தினி செல்வகுணாளன்

[ இலங்கை அதிபர் சேவை 1 ]


அவர்களை வாழ்த்தி வரவேற்பதில் மத்தியின் மைந்தர்கள் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.
கல்லூரியின் பாரம்பரியத்தினையும் கல்வி மற்றும் இணைப்பாடவிதான
செயற்பாடுகளையும் வினைத்திறனுடன் முன்னெடுப்பதற்கு பழைய மாணவர்கள்/
பழைய மாணவர் சங்கம் தம்மாலானா ஒத்துழைப்பினை
தொடர்ந்தும் வழங்கி நிற்பார்கள்.

" மத்தியின் மணிக்கொடி
நித்தியம் நிலைக்கும் "

(19167)

பழைய மாணவர் சங்கம்
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
ஸ்தாபிதம் - 1906

## மரண அறிவித்தல்



### விநாயகமூர்த்தி சடாச்சரம்

மாதகலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட விநாயகமூர்த்தி சடாச்சரம் அவர்கள் கடந்த 16.02.2024 (வெள்ளிக்கிழமை) அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற விநாயகமூர்த்தி - ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை - செல்லமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சிவலட்சனம் அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான தவபாக்கியம், சிவசோதி, சிவானந்தம் மற்றும் கற்கண்டு, சுப்பிரமணியம், காலஞ்சென்றவர்களான ஆனந்த நடராஜா, தயானந்தம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சிவனாமம் மற்றும் சிவனேஸ்வரியம்மா, சிவம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற இலட்சுமனன் மற்றும் இலட்சுமனசேகர், இலட்சுமனதாஸ், கனகலட்சுமி, செல்வலட்சுமி, குகதாஸ் ஆகியோரின் பாசமிகு தந்தையும் இன்பம், இராஜினி, தர்சினி, குணரத்தினம், ராஜி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (19.02.2024) திங்கட்கிழமை பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக போதி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல் :
குடும்பத்தினர்

077 209 1972 (19168)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தா... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.02.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org